மார்ச்-166. **பொருளடக்கம்** 2013


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1-16 |
| 2. | ஹரிதாஸரின் இருசமய விளக்கம் | 17-20 |
| 3. | வேதநாயகன் விஷ்ணுவே | 21-28 |
| 4. | மாறன் பாப்பாவினம் | 29-32 |
| 5. | நெல்லிநகர் அருளாளதாசரின் பாகவதம் | 33-36 |
| 6. | திருவேங்கடவன் உலா | 37-40 |
| 7. | பன்னிரு பாட்டியலும் ஆழ்வார்கள் அருளிச்செய்த இலக்கியங்களுக்கான இலக்கணங்களும் | 41-44 |
| 8. | எறும்பியப்பாவின் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம் | 45-48 |
| 9. | திருவிருத்தத்தில் அமைந்துள்ள அகஇலக்கியக்கோட்பாடுகள் | 49-64 |


## ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ வெளியீடுகள் பற்றிய அறிவிப்பு

இராமானுசரின் ஆயிரமாவது ஆண்டு வைபவங்களை யொட்டி ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ நிறுவனத்தின் சார்பில் இதுகாறும் மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன. அந்த வரிசையில் 4 மற்றும் 5ஆம் பாகங்கள், விஜய வருஷம் சித்திரை மாதம் 26ஆம் நாள் (9.5.2013) வியாழக்கிழமை ஸ்ரீபெரும்பூதூரில் வெளியிடப் படவுள்ளன. எம்பெருமானார் அருளிச் செய்த 'வேதார்த்த ஸங்க்ரஹம்' மற்றும் 'வேதாந்த தீபம்' ஆகிய இருநூல்கள் எளிய தமிழ்நடையில் அமைந்துள்ள விளக்கங்களோடு மணிப்ரவாள சொற்களுக்கான அகராதியுடன் வெளியிடப்படவுள்ளன. வேதார்த்தஸங்க்ரஹம் 1100 பக்கங்கள் கொண்ட விரிவுரை யுடனும், வேதாந்த தீபம் 800 பக்கங்கள் கொண்ட விரிவுரையு டனும் அனைவரும் படித்து அறிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழ் நடையில் இவை எழுதப்பட்டுள்ளன. வேதார்த்த ஸங்க்ரஹம் இரு பகுதிகளுடனும், வேதாந்ததீபம் ஒரு பகுதியுடனும் வெளிவரவுள்ளன. இந்த இரண்டு நூல்களின் விலை ரூ. 800. 15.4.2013க்குள் முன்பதிவு செய்வோர்களுக்கு ரூ. 650க்கு இந்த இரண்டு நூல்களும் சலுகை விலையில் அளிக்கப்படவுள்ளன. நேரில் பெற்றுக் கொள்ள இயலாதவர்கள் Courier கட்டணமாக தமிழ்நாட்டுக்குள் ரூ.60ஐ கூடுதலாகச் செலுத்த வேண்டும். ***


Editor : SriVaishnavaSri **A.KRISHNAMACHARI,**
Printed at: *Sri Ranganachiyar Achagam, 214, East Uthara St., Srirangam, Trichy-6. 98842 89887. www.srivaishnavasri.com*


## செய்திகள்

**1. ஸ்ரீ ஒப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீமத் உ.வே.வ. ந. கோபால தேசிகாசார்ய ஸ்வாமிகளின் 80-வது திருநக்ஷத்ர மஹோத் ஸவம் 04.2.2013, 5.2.2013 ஆகிய இரு தினங்களிலும் மிகச் சிறப்பாக நடந்தேறியது. முதல் நாள் 4.2.2013 அன்று, பல பாகவதோத்தமர்கள் ஸம்ப்ரதாய விஷயங்களைப் பற்றியும், ஸ்ரீவைஷ்ணவத்திற்கு ஸ்வாமிகள் ஆற்றிவரும் உயர்ந்த தொண்டினைப் பற்றியும் சிறப்பாகப் பேசினார்கள். அன்று மாலையில் கும்பகோணம் நகரப் பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து ஸ்வாமிகளுக்கு ஒரு மாபெரும் பாராட்டு விழாவை நடத்தினர். நகரப் பிரமுகர்களால், ஸ்வாமிகளுக்கு மாபெரும் புஷ்ப அபிஷேகம் சிறப்பாக நடத்தப் பட்டது. ஆயிரக் கணக்கான சிஷ்யர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஸ்வாமிகளின் நவநீத பரம்பரையையும் திவ்ய சரித்திரத்தையும் திண்டிவனம் நம்மாழ்வார் சபைக்குழுவினர் திரு. வேங்கடேச பாகவதர் தலைமையில் வில்லுப்பாட்டாகப் பாடினார்கள். 5.2.2013 காலையில் ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளை, அவர்களுடைய திருமாளிகையில் இருந்து ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் ஒப்பிலியப்பன் ஸந்நிதிக்கு ஊர்வலமாக திவ்ய நாம பஜனை கோஷ்டியுடன் அழைத்து வந்தார்கள். ஸ்ரீ ராமாநுஜரால் நியமிக்கப்பட்ட 74 ஸிம்ஹாசனாதிபதிகளில், வங்கீபுரத்து ஆச்சான் பரம்பரையில் அவதரித்து அருளிய, நம் ஸ்வாமிகள், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை வளர்த்துக் கொண்டு, பல்லாண்டு பல்லாண்டுகள் திருமேனி பாங்குடன், ஸ்ரீபூமி தேவித் தாயாருக்கும் ஸ்ரீ ஒப்பிலியப்பனுக்கும் கைங்கர்யம் செய்து கொண்டு வாழ்ந்திட மங்களாசாஸனம் செய்தனர் அடியார்கள்.**

**2. நாகைப்பட்டினத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பாப்பாகோயில் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலில் 20.2.2013 அன்று திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதரவில் நடைபெற்ற ஸ்ரீகுலசேகராழ்வார் திருநக்ஷத்திர உத்ஸவத்தை முன்னிட்டு பாஞ்சஜன்யம் ஆசிரியர் ''குலசேகராழ்வாரும் அரங்கத்து எம்பெருமானும்'' என்னும் தலைப்பில் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றினர். ***
**

*Statement about ownership and other particulars about*

# PANCHAJANYAM

*(Registration No. TNTAM/2000/5374)*
**From IV (See Rule 8)**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Srirangam |
| 2. | Periodicity | : | Monthly |
| 3. | Printer's Name | : | Sri Ranganachiyar Achagam |
| 4. | Publisher's Name | : | A. Krishnamachari |
| | Nationality | : | Indian |
| | Address | : | 214, East Uthara Street, Srirangam, Trichy-6. |
| 5. | Editor's Name | : | A. Krishnamachari |
| | Nationality | : | Indian |
| | Address | : | 214, East Uthara Street, Srirangam, Trichy-6. |
| 6. | Name & Address of the individuals who own the news paper and partners or share holders holding more than one percent of the total | : | A. Krishnamachari 214, East Uthara Street, Srirangam, Trichy-6. |

I A. Krishnamachari, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Srirangam,
31.03.2013.

A. KRISHNAMACHARI
Editor & Publisher

Registration No.TNTAM/2000/5374, Registered as a Newspaper
Registered Newspaper - Posted at Srirangam H.P.O.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:

# பாஞ்சஜன்யம்

**இதழ் எண். 166 மார்ச் - 2013**

**இலக்கியம், வரலாறு, கல்வெட்டுகள், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தக் கோட்பாடுகள், மற்றும் மரபு மீறல்களைக் கண்டித்து எழுதப்படும் கட்டுரை களைக் கொண்ட ஒரு புரட்சிகர பல்சுவை மாத இதழ்.**

**ஆசிரியர்:ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

**தனிப் பிரதி ரூ. 20/-**

**ஆண்டு சந்தா ரூ. 200/-**

**கிடைக்குமிடம்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ,**
**214, கீழை உத்தரவீதி, திருவரங்கம், திருச்சி-6.**
**☎: 0431-2434398. www.srivaishnavasri.com**

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ


| முழக்கம்-16 | பாஞ்சஜன்யம் மார்ச் 2013-166 | ஒலி 3 |
| --- | --- | --- |


## 1. திருச்சியில் நடைபெற்ற இந்து மறுமலர்ச்சி மகாநாடு.

விசுவஹிந்து பரிஷத் அமைப்பின் தலைவரான திரு. வேதாந்தம் அவர்களின் 80வது ஆண்டு பூர்த்தி விழா திருச்சியில் 2013 மார்ச் மாதம் 2 மற்றும் 3 தேதிகளில் நடைபெற்றது. அதையொட்டி தமிழ்நாடு விசுவ ஹிந்து பரிஷத் மற்றும் கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவை சார்பில் இந்து மறுமலர்ச்சி மாநாடு நடைபெற்றது. திருச்சி கொள்ளிடம் பாலம் அருகில், நடைபெற்ற இந்த மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியாக மாபெரும் துறவியர் மாநாடு நடைபெற்றது. 80வது ஆண்டு பூர்த்திவிழா காணும் அகில உலக விசுவ இந்து பரிஷத் ஆலோசகர் வேதாந்தத்தின் சமுதாய சேவைகள் குறித்த படக் கண்காட்சியினை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜயேந்திரர் திறந்து வைத்து, இந்து சமுதாயத்துக்கு வேதாந்தம் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி, அவருக்கு, 'இந்து சமய சேவா ரத்னா' என்ற பட்டத்தை காஞ்சி மடம் சார்பில் வழங்கினார். நிகழ்ச்சியில் மாநாட்டு

வரவேற்புக் குழுத்தலைவர் முன்னாள் மத்திய அமைச்சர் சுப்பிரமணியசாமி அறிமுக உரையாற்றினார். தொடக்கவிழா நிகழ்ச்சிகளை தொடர்ந்து 4 பிரிவுகளில் கருத்தரங்குகள் நடைபெற்றன. 'துறவியர் வழிகாட்டுதலில் ஜாதி ஒற்றுமை', 'திரு மடங்கள் பார்வையில் இந்து சமய வளர்ச்சி', 'திருக் கோயில்களும், திருமடங்களும் மற்றும் சமயச் சார்பற்ற அரசும்', 'இந்து சமய கோட்பாடுகளும், அரசியல் அமைப்பு சட்டமும்' போன்ற தலைப்புகளில் அமைந்த 4 அமர்வுகளில் துறவியர் பலர் பங்கு கொண்டு தங்கள் கருத்தினைத் தெரிவித்தனர். ஸ்ரீவைஷ்ணவர்களின் பிரதிநிதிகளாக ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருக்குறுங்குடி பேரருளாளர் ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீ.உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன், பாஞ்சஜன்யம் ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். சைவ மடாதிபதிகள் பெருமளவில் வருகை தந்து சிறப்பித்தனர்.

3.3.2013 அன்று விசுவ ஹிந்து பரிஷத் மற்றும் கிராமக்கோயில் பூஜாரிகள் பேரவையினர் சுமார் லட்சம் பேர் பங்கேற்ற இந்து மறுமலர்ச்சி மகாநாடு நடைபெற்றது.

இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பலர் அரிய கருத்துக்களை வெளியிட்டனர். அவற்றில் சிலவற்றிலிருந்து சிந்தனைக்கு விருந்தாய் அமைந்தவற்றை கீழே தந்துள்ளோம்.

திருவாவடுதுறை ஆதீனம் சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள்: இந்தியாவை மதச்சார்பற்ற நாடு என்கின்றனர். இன்று இலவசங்களுக்கு பஞ்சம் இல்லை. எல்லாம் இலவசமாக கிடைக்கிறது. இன்னும் திருவோடும், கௌபீன மும் தான் இலவசமாக அரசாங்கத்தால் தரப்படவில்லை. தற்போது கோயில்கள் நம் கையில் இல்லை. கோயில்களில் கூட தரிசனத்துக்கு விரைவு தரிசனம், அதி விரைவு தரிசனம், அம்பாள் சந்நிதிக்கு இவ்வளவு தொகை என்று கட்டணங் களை நிர்ணயித்துள்ளனர். இந்த நிலை மாற வேண்டும். மற்ற மதங்களில் அவர்களின் மதப்பெரியவர்களை குரு என்கின் றனர். ஆனால் இந்து மதத்தில்தான் சாமியார் என்று சொல்



கின்றனர். சாமியார் என்று சொல்வதை முதலில் கைவிட வேண்டும். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அச்சுறுத்து வதற்கு 'பிள்ளைபிடிக்கும் சாமியார் வந்துவிடுவான்' என்று பயம் காட்டி கார்யத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். குருமார்கள் என்று இவர்களை அழைத்திட வேண்டும். இன்று மடாதிபதிகளை நியமிப்பதில்கூட அரசு தலையிடுகிறது. பணியவைக்க முயல்கிறது. மீறினால் மடத்திற்கு மூடுவிழா நடத்திடுவோம் என்கிறது. இந்து சமுதாயத்தை பற்றியும், இந்து கடவுள்கள் பற்றியும் திரைப்படங்களில், டிவி நாடகங்களில் மிகவும் மோசமாக சித்தரிக்கப்படுவதை இந்துக்களை யாரும் எதிர்ப்பதில்லை. இலங்கையில் இந்து கோயில்களை இடிக்கும் ராஜபக்சேவுக்கு இந்தியாவில் ரத்தின கம்பள வரவேற்பு அளிக்கப்படுகிறது. இந்த அரசுக்கு கோயிலில் உள்ள கடவுளர் தேவையில்லை. உண்டியல் பணம்தான் தேவைப்படுகிறது. கோயில்களில் பிரஸாத ஸ்டால் என்ற பெயரில் தின்பண்டங்கள் சாப்பிடும் உணவு விடுதிகளாக செயல்படுகின்றன. மடாதிபதிகளுக்கு குத்தகை மூலம் கிடைக்க வேண்டிய தொகையை கேட்டால் குத்த 'கை' தான் வருகிறது. சைவத் தலங்கள் யாவும் சமத்துவ புரங்களாக உள்ளன. இந்த நிலை மாற வேண்டும்.

கோவை குமரகுருபர சுவாமிகள்: தமிழக அரசின் அறநிலையத்துறை கோயில்களையும், திருமடங்களையும் கைவசப்படுத்த ஆர்வம் காட்டுவது கவலை அளிக்கிறது. கோயில்களுக்கு மட்டும் இறை நம்பிக்கையற்றவர்களை அறங்காவலர்களாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் நியமிப் பது நல்லதல்ல. ஒரு பகுதியில் பலரது கூட்டு முயற்சியில், பெரும் பொருட்செலவில் கோயில் கட்டப்படுகிறது. ஆனால் அந்தக் கோயில்களை ஏதோஒரு காரணம் காட்டி இந்துசமய அறநிலையத்துறை தன்வசம் எடுத்துக் கொள்கிறது.

மயிலம் பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலைய சுவாமிகள்: இந்துக்களில் 99 சதவீதம் பேர் கோயிலில் வழிபாடு நடத்துகின்றனர். ஆனால் ஏதாவதொரு கோரிக்கை அடிப்படையிலேயே இவர்கள் இறைவனிடம் வியாபாரம்

பேசுகின்றனர். உண்டியலில் போடப்படும் பணம் நாளுக்கு நாள் அதிகமாய் வருகிறது. உண்டியலில் தயவுசெய்து யாரும் பணம் போடாதீர்கள். ஏனெனில் அவை அரசாங்கத்தின் ஆடம்பர செலவிற்கு உபயோகம் கொள்ளப்படுகிறதே தவிர இந்துசமய வளர்ச்சிக்கும் கோயில் பூஜைகளுக்கும் அந்தப் பணம் பயன்படுத்தப்படுவதில்லை. எந்த வேலைக்கும் டோனரைத்தேடி அலையும் இந்துசமய அறநிலையத் துறையின் போக்கு மாறவேண்டும். பக்தியை ஆன்மிக ரீதியாக அமைத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு நற்சிந்தனைகளை இளம்பருவத்திலேயே கற்பிக்க வேண்டும், அதற்குப் பெற்றோர்கள் முதலில் நல்ல நூல்களை கற்ப தோடும், நல்ல சொற்பொழிவுகளையும் கேட்டு, நல்ல குருமார்களையும் சந்தித்து தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். தமிழகத்தல் ஆண்டுதோறும் ஒரு கும்பமேளா நடத்த ஆன்மிக சான்றோர் வழிவகை செய்ய வேண்டும்.

**விஎச்பி மாநில செயல் தலைவர் நாராயணசுவாமி:** அரசியல் ரீதியாக, சட்ட ரீதியாக இந்துக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். மதச்சார்பற்ற நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை என்று மத ரீதியான சலுகைகள் சட்டத்தில் கூடாது. ஆனால், இந்து துவங்கும் கல்வி நிறுவனத்திற்கு தடையாக 12 விதமான கட்டுப்பாடுகள் உள்ளன. சிறு பான்மை கல்வி நிறுவனங்களை அவர்கள் விருப்பம் போல் நிர்வகிக்க முழுஉரிமை அளிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் சங்கர நாராயணன் கமிஷன், தமிழகத்தின் கிருஷ்ணசாமி ரெட்டி கமிஷன் அறிக்கைகள் மறைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளில் கோயில்களை விட்டு அரசு வெளியேற பரிந்துரைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்து மடாதி பதிகளும் இந்துக்கள் ஓட்டு குறித்து தீர்மானிக்க வேண்டும். இந்துக்களுக்கு ஆதரவாக உள்ள கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

**வேளுக்குடி கிருஷ்ணன்:** மடங்களில் தலைவர் களுக்கும், சீடர்களுக்கும் தனித்தனி கடமைகள் உண்டு. குருமார்களிடம் எல்லோரும் எல்லாக் கருத்தையும் கூறிவிட



முடியாது. முற்காலத்தில் மன்னர்கள் ஆண்டபோது, ஜாதிய உணர்வுகளை வைத்து யாரும் அரசியல் செய்த தில்லை. எனவே ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்றவர்கள் இதுபற்றி எவ்வித கருத்துக்களையும் கூறாமல் சென்று விட்டனர். ஆனால் தற்போது அரசியல் சூழ்நிலை மாறி, மக்களே ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கும் நிலை வந்துவிட்டபோது, நாம் அதைப்பற்றி பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதிர்ஷ்டவசமாக நமது சமுதாயத்தில் இன்றும் குரு பரம்பரை பழக்கம் இருக்கவே செய்கிறது. என்றாலும் எல்லா குருமார்களும் எல்லா கருத்தையும் பேசிவிட முடியாது. தற்போதைய காலத்தின் கட்டாயம், குருமார்களிடம் சமுதாய சிந்தனைகள் குறித்து எடுத்துக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**ஸ்ரீஎம்பார் ஜீயர் ஸ்வாமிகள்:** நம்மிடையே மொழி, ஜாதி போன்றவற்றில் வேறுபாடு இருந்தாலும் அவை யெல்லாம் மாற்றத்திற்குட்பட்டவை. ஆனால் ஆன்மிகம் நிலையானது. இன்று பிரபலமாக பேசப்படும் சமுதாய சீர்த்திருத்தம் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ராமானுஜர் சிறப்பாக வழிவகை ஏற்படுத்தியுள்ளார். அவற்றில் இருந்து சற்றே நாம் விலகிய தன் காரணமாகத்தான் தற்போது மீண்டும் அந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். ராமானுஜர் கூறிய அடிப்படை சித்தாந்தத்தை நாம் அனைவரும் நினைவு கூர்ந்து கடைப்பிடிக்க துவங்கினால், அன்று ஏற்பட்ட சமுதாய நல்லிணக்கம், சீர்திருத்தம் ஆகியவை தானாக மீண்டும் வந்து சேரும்.

**மலைக்கோட்டை மவுனகுரு தம்பிரான் சுவாமிகள்:** தமிழகத்தில் 45 ஆயிரத்திற்கு மேற்பட்ட கோயில்கள் உள்ளன. ஆனால் கோயில் நிர்வாகத்தில் உள்ள இடர்ப்பாடு களை எந்த அரசு வந்தாலும் கவனிப்பதில்லை.

**தூத்துக்குடி செங்கோல் ஆதீனம்:** எல்லா பிறப்பிலும் மேலானது மானுடப்பிறப்பு. மானுடப் பிறவி யிலும் நல்ல காரியம் செய்ய வாய்ப்பு பெற்றவர் வேதாந்தம்.

உடலை பாது காப்பது சமையல். ஆன்மாவை பாதுகாப்பது சமயம். சமுதாயம் அமைவதை பொறுத்தே சமயம் அமை கிறது. மக்களை திருத்தவும், பண்பாட்டினை வளர்க்க நல்ல சமயம் இது. மாணவர்களுக்குள் ஆக்ரோஷம், வெட்டு, குத்து என்று வன்முறைகள் நடக்கின்றன. இவை தவிர்க்க ஆன்மிகம் வளர்க்கப்பட வேண்டும்.

காமாட்சி சுவாமிகள்: அனைத்து மடாலயங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். பல சிந்தனைகளோடு உள்ளவன் மனிதன். ஒரே சிந்தனையோடு உள்ளவன் மகான். ஒவ்வொருவரும் சுயகட்டுப்பாடு, தவலிமை வளர்த்து தன்னை சரிப்படுத்தி பிறரையும் சரியாக்க வேண்டும். இந்து சமுதாயம் நமக்கு என்ன செய்தது என்று நினைக்காமல், மதத்திற்கு நாம் என்ன செய்தோம் என்று நினைக்க வேண்டும்.

சங்கரன்கோயில் சுவாமி ராகவானந்தர்: நமக்குள் ஒற்றுமை அவசியம். ஒற்றுமை வளர்ந்தால் இந்து மறுமலர்ச்சி தானாக உருவாகும். நாம் ஒரே குரலாக ஒலித்தால், எவராலும் வீழ்த்த முடியாது. மறுமலர்ச்சி ஏற்படுத்த சன்யாசிகள், மடாதி பதிகள் கிராமம், கிராமமாக செல்ல வேண்டும்.

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்: இந்துசமய அறநிலையத்துறைச்சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுகின்றது. இந்துசமய அறநிலையத் துறைச் சட்டத்தின் பலபிரிவுகள் அரசியல் நிர்ணயச்சட்டம் நமக்கு அளித்த உரிமைகளுக்கு எதிரானவை. டாஸ்மாக் கடைகளிலிருந்து கிடைக்கும் வருமா னத்தைவிட அதிக வருமானத்தை இந்துத் திருக்கோயில்கள் மூலம் அடைந்து வருகிறது தமிழ்நாடு அரசு. இந்துக்களாய்ப் பிறந்ததற்காக இரட்டை வரி செலுத்தி வருகிறோம். முகலாயர்கள் காலத்தில் அவர்கள் விதித்த ஜஸியா வரியை ஒக்கும் இந்தச் செயல். 63 e என்ற உட்பிரிவு சட்டத்திலிருந்து உடனடியாக நீக்கப்பட வேண்டும். மக்கள் ஒன்றுதிரண்டு போராட வேண்டும். இல்லையெனில் இந்துக்கோயில்களும், மடங்களும் அரசாங் கத்தால் அழிக்கப்பட்டு விடும். நிலங்களிலிருந்தும், கட்ட டங்களிலிருந்தும் இன்றைய சந்தை நிலவரப்படி குத்த



கையையோ அல்லது வாடகையையோ வசூல் செய்தால் ஆண்டுக்கு 5,000 கோடி வருமானம் திருக்கோயில்களுக்கு கிடைக்கும். இதைக்கொண்டு ஆகம, வேத, திவ்யப்பிரபந்த, தேவார, பாடசாலைகளும், கோசாலை களும் பத்து லட்சம் வருமானம் ஈட்டும் கோயில்களில் ஏற்படுத்திடலாம். சென்னை உயர்நீதிமன்றம் அக்டோபர் 2012இல் அளித்த தீர்ப்பின்படி பழைய ஒப்பந்தங்கள் நீக்கப்பட்டு புது ஒப்பந்தங்கள் சந்தை நிலவரப்படி செய்து கொள்ளப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் இன்றைய வரை இந்தத் தீர்ப்பை அமுல்படுத்தவில்லை.

தமிழ்நாடு விசுவ ஹிந்து பரிஷத் அறவழி காட்டும் ஆனறோர் பேரவை ஆதீனங்கள், மடாதிபதிகள், துறவி யர்கள் மாநாட்டில் 2.3.2013 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. திருமடங்கள் நம் முன்னோர்கள் ஏற்படுத்தியதன் நோக்கம் நமது சமயங்களை பாதுகாப்பதற்கும், சமயத்தை பரப்புவதற்குமே என்ற உயர்ந்த நோக்கம்தான். மக்களோடு தொடர்பு என்ற நிலை தற்போது மிக அவசியமாக உள்ளது. பக்தர்கள் அனைவரும் ஏதாவது ஒரு மடத்துடன் தொடர்பு கொண்டு திருமடத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு மேற்படி திருமடங்கள் முயற்சி மேற் கொள்ள வேண்டும்.

2. ஜாதிகளுக்கிடையே மோதல்கள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றது. இது இந்துக்களிடையே ஒற்றுமை இல்லாத சூழலை உருவாக்கும் செயலாகும். இதைத் தடுத்து, இந்துக்கள் ஒரே இனம் என்ற நிலை ஏற்பட, துறவியர்களும், மடாதிபதிகளும் பாடுபட வேண்டும். ஜாதீய அமைப்புத் தலைவர்களுடன் கலந்துபேசி, ஒரு சுமூகமான, இணக்கமான சூழ்நிலை ஏற்பட வழி வகை செய்ய வேண்டும்.

3. இந்துக்களுக்காகவே உள்ள ஒரே நாடு நமது பாரத நாடு. இந்த நாட்டிலும் இந்துக்கள் இரண்டாந்தர குடிமகனா கவே நடத்தப்படும் நிலை உள்ளது. நாம் ஒன்றுபட்டு நான்

இந்து என்ற மனநிலையோடு இனி வருகின்ற தேர்தல்களில் வாக்களிக்கும் நேரத்தில் நமது ஓட்டு வங்கியை பலப்படுத்தி நமது சக்தியை நிரூபிக்க வேண்டும்.

4. தமிழக இந்து அறநிலையத்துறை சமயம் சார்ந்த துறையாகும். ஆனால், அத்துறை சமயசார்போடு செயல்பட வில்லை. சமயச் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியவில்லையென்றால் துறையினை விடுவித்து ஒரு தனித் தியங்கும் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும். திருப்பதி தேவஸ்தானத்தின் - தர்ம பிரச்சார அமைப்பு போன்று அறநிலையத்துறை தமிழகத்தில் உள்ள பெரிய திருக்கோயில் களை மையமாக வைத்து சமயப் பரப்புனரை மீண்டும் நியமித்தும், வேதபாடசாலை, ஆகமபாடசாலை, ஓதுவார் பாடசாலை, தேவாரம் மற்றும் திவ்வியப் பிரபந்தங்கள் சொல்லித்தரும் பாடசாலை, காப்பகங்கள், கோசாலைகள், சமய உண்மைகளை வெளிப்படுத்தும் நன்னெறி நூல்கள் அடங்கிய நூலகங்கள் போன்ற பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

5. கி.பி. 2017ஆம் ஆண்டு பார்போற்றும் ராமானுஜ ருடைய ஆயிரமாவது ஆண்டு அவதார நன்னாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் நாடெங்கும் விழாக்கள் கொண்டா டப்பட வேண்டும். மாபெரும் தத்துவ ஞானியான, மனித நேயப் பண்பாளரான, சமூக சீர்திருத்தவாதியான ராமானுஜரு டைய நினைவை நிலையாகப் போற்றிடும் வண்ணம் ராமானுஜர் பல்கலைக்கழகம் ஒன்றினை அவருடைய வாழ்வோடு மிகவும் தொடர்பு கொண்ட திருக்கோட்டியூரில் அமைத்திட தமிழக அரசு ஆவன செய்திட வேண்டும் என்று துறவியர் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

6. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்க ளையோ, கட்டடங்களையோ, பிறர்க்கு விற்பது கூடாது. அவ்வாறு விற்கப்பட்ட சொத்துக்களை மீட்டு திருக்கோயில் களுக்கே ஒப்படைக்க வேண்டும் என்று துறவியர் மாநாடு கேட்டுக் கொள்கிறது.



7. தமிழ் நாடு அரசு 15.5.2012 அன்று சட்டப் பேரவையில் The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act Amendment - 32 தாக்கல் செய்துள்ளது. இதன்படி அனைத்து இந்து சமய உட்பிரிவு களைச் சார்ந்த ஆன்றோர்களின் பிருந்தாவனங்கள், சமாதி கள், திருவரசுகள் போன்ற ஆன்றோர்களைப் புதைத்த இடங்கள். அவற்றின் நிர்வாகப் பொறுப்பு அவை அமைந் துள்ள இடம் அவற்றின் சொத்துகள் ஆகியவற்றை இந்துசமய அறநிலையத்துறை தன் வசம் எடுத்துக் கொள்வதற்கு இந்த சட்ட திருத்தம் வழி செய்கிறது. இது இன்னும் சட்ட மாக்கப்படவில்லை. இந்தத் திருத்தம் சட்டமாக்கப்பட்டால் அதன் விளைவுகள் சமயத்திற்கு ஊறுவிளைவிப்பதாக அமைந்திடும். ஆகவே இந்தத் துறவியர் மகாநாடு மூலம் மாண்புமிகு முதலமைச்சருக்கு இந்த சட்டத்திருத்தத்தைக் கைவிடுமாறு சமயப் பற்றுடைய பெரியோர்கள் கேட்டுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரை நேரில் சந்தித்து அவரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

8. உள்துறை விவகாரங்களில் இந்து சமய அறநிலையத் துறையின் தலையீடு அதிக அளவில் காணப் படுகிறது. மேலும் இதுபோன்ற தலையீடுகளை எதிர்த்து 63e இன் கீழ் முறையீடு செய்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இது முற்றிலும் தவறு. உள்துறை விவகாரங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பற்றி அரசு அதிகாரிகளுக்குத் தெரிந் திருக்க வாய்ப்பில்லை. மேலும் அதற்குரிய பயிற்சியை அவர்கள் பெற்றவர்களும் அல்லர். ஆகவே உள்துறை விவகாரங்கள் பழக்க வழக்கங்களைப் பற்றிக் கற்றறிந்த சான்றோர்கள் கொண்ட உயர் மட்டக் குழுவை அவரவர்கள் சமயத்திற்கேற்ப அமைத்திட வேண்டும். அந்தக் குழுவிற்கு உரிய Judicial Power ஐ சட்ட ரீதியாக தந்திட வேண்டும் என்று துறவியர் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

9. காலச்சூழ்நிலையில் மதம் மாறிப்போன இந்துக் களை மீண்டும் இந்து மதமாகிய தாய் மதத்துக்கு திறந்த

மனதோடு மாநாடு வரவேற்கிறது. அவர்கள் உரிய கௌரவத்துடன் நடத்தப்படுவார்கள் என்று இந்த மாநாடு உறுதியளிக்கிறது.

**தமிழ்நாடு விசுவ ஹிந்து பரிஷத் மற்றும் கிராமக்கோயில் பூஜாரிகள் பேரவையின் ஆதரவில் நடைபெற்ற இந்து மறுமலர்ச்சி மகாநாட்டின் முடிவில் 3.3.2013 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.**

1. தன் வாழ்நாள் முழுவதும் பரம்பரையாக இந்து பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், கிராமக் கோயில்களை மையமாக வைத்து காப்பாற்றி வரும் கிராமக் கோயில் பூஜாரிகளின் அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய தமிழக அரசு நலவாரியம் அமைக்க வேண்டும் என்று கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவை முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றிய தமிழக முதலமைச்சர் டாக்டர். செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு தமிழக விசுவ ஹிந்து பரிஷத் மற்றும் கிராம கோயில் பூஜாரிகள் பேரவையின் ஹிந்து மறுமலர்ச்சி மகாநாடு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

2. கிராமக்கோயில் பூஜாரிகள் பேரவை சார்பாக சதாபிஷேக வைப்பு நிதி திட்டம் மூலம் ஒரு கோடி ரூபாய் நிதியை முதல் தவணையாக சேகரிப்பது என்றும், சேகரிக்கும் தொகையின் வட்டி மூலம் உதவி செய்வதற்காகவும், இந்த திட்டத்திற்கு தனவந்தர்களும், பூஜாரிகளும் முன்வந்து நிதி அளிக்க வேண்டும் என்றும், இதன் மூலம் பூஜாரிகள் குடும்ப அத்தியாவசிய தேவைக்கு, சிறு நிதி உதவி செய்ய வேண்டும்.

3. அரசு கட்டுப்பாட்டில் இருக்கும் திருக்கோயில்களில் வரும் வருவாய் மூலம் அரசு கட்டுப்பாட்டில் உள்ளதும், கட்டுப் பாட்டில் இல்லாத கிராமங்களில் உள்ள திருக்கோயில் களுக்கும் திருப்பணி நடைபெற நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.



4. தமிழக முதல்வரின் விலையில்லா கறவை பசு வழங்கும் திட்டத்தின் கீழ் திருக்கோயில்களில் தானமாக வரும் கறவை பசுக்களை கிராமக் கோயில்களில் பூஜை செய்யும் பூஜாரிகளின் குடும்ப வாழ்வாதாரம் உயர, அவர்களுக்கு வழங்கவும், திருக்கோயில்களில் இறைவனுக்கு சாற்றும் வஸ்திரங்களை (ஆடைகளை) ஏலம் மூலம் விற்பதை தவிர்த்து அப்பகுதியில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கும், கோயில்களுக்கும் பயன்படும் வகையில் வழங்க வேண்டும்.

5. அனைத்து திருக்கோவில்களிலும் மின் இணைப்பிற் காக வியாபார நோக்கத்தோடு வசூலிக்கும் மின் கட்டண விகிதத்தை வீட்டு உபயோகக் கட்டண விகிதப்படி வசூலிக்க வேண்டும்.

6. மசூதிகளில் பணிபுரியும் உல்மாக்களுக்கு மேற்கு வங்கத்தில் ரூ.2,500மும், கர்நாடகத்தில் ரூ.8,000மும் அம்மாநில அரசுகள் மாத ஊதியம் வழங்குவது போல, தமிழக அரசும் கிராமக் கோயில் பூஜாரிகளுக்கு மாத ஊதியம் வழங்க உத்தரவிட வேண்டும்.

7. தமிழக அரசு 4000 கிராமக்கோயில் பூஜாரிகளுக்கு ஓய்வூதியம் அறிவித்தும் அந்த இலக்கு முழுமையாக நிறை வேற்றப்படவில்லை. எனவே, தமிழக அரசு உத்தரவுப்படி அனைத்து பூஜாரிகளுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். கிராமக்கோயில் பூஜாரிகளின் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் வழங்கிவரும் ரூ. 1000த்தை ரூ.2000மாக உயர்த்தித் தரவும், இப்பயனை அடைந்துவரும் பூஜாரிகளின் மறைவிற்குப் பிறகு அவரது மனைவிக்கு அந்த ஓய்வூதியத்தை வழங்க வேண்டும்.

8. சிறுபான்மை மக்களை ஊக்கப்படுத்தும் விதமாக மத்திய, மாநில அரசுகள் எடுத்த ஒரு சில நடவடிக்கைகள் கவலை அளிப்பதாக உள்ளது. சமீபத்தில் நடந்த சில நிகழ்ச்சிகள் அதற்கு சான்றாக அமைந்துள்ளன. துப்பாக்கி, விச்வரூபம் போன்ற தமிழ் சினிமா படங்களை மத்திய

அரசின் சென்சார் போர்டு தணிக்கை செய்த பிறகும் தமிழக அரசு தடை செய்த நடவடிக்கை சிறுபான்மை மக்களிடம் போராட்ட உணர்வை ஊக்குவிப்பதாக உள்ளது. சிறு பான்மையினரை தூண்டிவிடுவது போல் அமையும். இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலங்களில் நிகழாமல் தவிர்க்க வேண்டும்.

9. இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருக்கும் திருக்கோயில்களில் இறைவனை தரிசனம் செய்வதற்கு கட்டணம் வசூல் செய்வது கோயில்களை வியாபார நோக்குடன் நடத்துவதுபோல் தெரிகிறது. பக்தர் களிடம் கட்டணம் வாங்குவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இது உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும். திருவிழாக்காலங்களில் பக்தர்களிடம் வரி வசூல் செய்வதும் பேருந்துகளில் சிறப்பு கட்டணம் என்ற பெயரில் முஸ்லீம்கள் ஆட்சிக் காலத்தில் வரி வசூலித்தது போல் அமைந்துள்ளது. இது மிகவும் கண்டனத்திற்குரியது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

10. நமது உயிருக்கு நிகரான பசுக்களையும், கால்நடை களையும் இறைச்சிக்காகவும், தோல் பயன் பாட்டிற்காகவும் கொல்வதைத் தடை செய்வதற்காகவும் ஏராளமான கால்நடைகள் சித்ரவதை செய்யப்பட்டு மாநிலங் களிடையே கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக மாநில அரசு தக்க நடபடிக்கைகள் எடுக்க வேண்டும். கடத்தல்காரர் களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட கால்நடைகள் பாதுகாப்பாக கோசாலைகளில் காப்பாற்றப்பட்டு வளர்ப் பதற்கும் தமிழக அரசு மானியம் வழங்க வேண்டும். மேலும் அறநிலையத்துறை மூலமாக கோயில் நிலங்களில் தமிழகமெங்கும் கோசாலைகள் அமைப்பதற்கும் தமிழக அரசு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

11. விசுவ ஹிந்து பரிஷத் மற்றும் அதை சார்ந்த கிளை அமைப்புகள் இனி வருகின்ற தேர்தல்களில் இந்துக்களுக் குள்ளே இருக்கின்ற ஜாதி வேற்றுமைகளை மறந்து, இந்து என்ற ஒரே அமைப்பாக செயல்பட்டு நமது வாக்கு வங்கியின்



சக்தியினை உயர்த்தி, அரசியல் கட்சிகள் உணருமாறு செய்ய வேண்டும். இதன்மூலம் மோசடி மதமாற்றம், ஜிகாதி தீவிர வாதம் போன்ற அச்சுறுத்தல்களில் இருந்து இந்து சமுதாயம் பாதுகாக்கப்படும். நமக்கென்று ஒரு ஒரு மரியாதையும், கௌரவமும் அப்போதுதான் கிடைக்கும். இதற்காக எல்லோரும் இணைந்து பாடுபட வேண்டும் என்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

12. வியாபாரிகளை நசுக்கும் வால்மார்ட் நிறுவ னத்தை தடைசெய்ய வேண்டும்.

13. சச்சார் கமிஷன் சிபாரிசுப்படி முஸ்லீம் மாணவர்க ளுக்கு கல்வி உதவி செய்யப்படுவதுபோல் ஹிந்து பரிஷத் மாணவர்களுக்கும் வழங்க வேண்டும்.

14. இந்து சமுதாயக் குடும்பம் மற்றும் இளைஞர்களை பாதிக்கும் டாஸ்மாக் (மதுபானக்கடை) கடைகள் தடை செய்யப்பட வேண்டும். தமிழகத்தில் குஜராத் போல் பூரண மதுவிலக்கு சட்டம் கொண்டுவர வேண்டும்.

15. 100 சதவிகிதம் இந்துக்களுக்கு மட்டுமே சொந்த மான அரங்கநாதர் திருக்கோயிலுடன் தொடர்புடைய ஸ்ரீரங்கத்தில் கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத் தலங்கள் அமைக்க தீவிர முயற்சி மேற்கொண்டும், விவேகானந்தரின் 150வது நினைவு நாளில் அவரைக் கேவலப்படுத்தும் விதமாகத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடும் கிறிஸ்தவர் களின் செயலை அரசும் அறிநிலையத்துறையும் தடுக்க வேண்டும். மேலும் அமல ஆச்ரமம் மற்றும் எதிரில் உள்ள கிறிஸ்தவ சமுதாயத் திருமணக்கூடம் ஆகியவைகள் அரங்க நாதர் கோயிலுக்கு சொந்தமான நந்தவனப் பகுதியில் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தை மீட்க அரங்கநாதர் கோயில் நிர்வாகம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். ✱✱✱

**2. கிராமக்கோயில்களும், நமது கடமையும்:**

தமிழ்நாட்டில் 38,000க்கும் மேற்பட்ட கோயில்கள் இந்துசமய அறநிலையத்துறையின் பிடியில் சிக்கித் தவிக்

கின்றன. கோடிக்கணக்கில் திருக்கோயில்களின் வருமானம் இந்துசமய முன்னேற்றத்திற்கு பயன்படுத்தப்படாமல் பேருந்து நிலையம் கட்டுவதற்கும், கழிப்பறைகள் கட்டுவதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் செலவிடப்பட்டு வருகின்றன. ஒரு கால பூஜை என்ற கண் துடைப்புத் திட்டத்தின்கீழ் ஒரு கோயிலுக்கு ஒருமாதத்திற்கு 600ரூ வழக்கப்படுகிறது. ஆராதனங் களை மேற்கொள்ளும் அர்ச்சகருக்கு வேறு எந்த வருவாயும் கிடையாது. பல கோயில்களில் ஒரு வேளை பூஜை நடப்பதே அரிதான செயலாக ஆகிவிட்டது. அரசாங்கம் ஆண்டுதோறும் பல்வழியிலும் திருக்கோயில்களிலிருந்து பெறப்படும் வருமானத்தை விழுங்கி வருகிறது. இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும் இந்தக் கொள்ளையை யாரும் தடுத்து நிறுத்திட முடியாது. இந்து மக்களுக்கு முதுகெலும்பில்லை. உணர்ச்சியில்லை. ஆகவே அரசியல்வாதிகள் அவர்களைக் காலில் போட்டு மிதிக்கிறார்கள். சிறுபான்மையினருக்கோ அனைத்துச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

இத்தகையதோர் சூழ்நிலையில் நல்ல உள்ளம் படைத்த சிலர் தங்களால் முடிந்த அளவு முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை பாஞ்சஜன்யம் ஆசிரியர் விடுத்திருந்தார். அதை ஏற்று சென்னையில் இயங்கிவரும் அனுஜன் அறக்கட்டளையினர் பத்து கிராமத்துக்கோயில்களை தத்தெடுத்து அந்தக் கோயில்களில் ஆகமம் அறிந்த அர்ச்சகர்களை நியமித்து ஒரு நாளைக்கு நான்கு வேளை ஆராதனங்கள் நடத்த முன்வந்துள்ளனர். அவர்களுடைய விருப்பப்படி திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கீழைப்பனையூர், கோட்டூர், கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள மிராளூர் ஆகிய கிராமங்களில் சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கிராமத்துக் கோயில்களில் ஆகம விதிகளின்படி ஆராதனங்கள் நடைபெற்றால் ஊரே நலமுடன் திகழும். இது நம்முன்னோர்கள் நமக்களித்த கொடையாகும். காக்கும் கடவுளான கண்ணன் நமக்காக அவனுடைய இருப்பிடமாகிய வைகுந்தத்தைத் துறந்து எளிய நிலையில் அனைவரும் தன்னிடம் வந்து வேண்டுவன பெற்றிட அர்ச்சை எனப்படும் உயர் நிலையில் திருக்கோயில்களில் குடி கொண்டுள்ளான். அப்படிப்பட்ட தன்மையில் இப்போதே இந்தக் கண்களால், இந்த



உலகில் கண்டுகளிக்க எழுந்தருளியிருக்கும் அவனுடைய அர்ச்சை வடிவினை கண்டுகளிப்பது ஒன்றே நம் வினைகளைக் களைந்திட சிறந்த உபாயமாகும்.

திருவாரூர் மாவட்டம் கீழைப்பனையூர் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது ஸ்ரீகஸ்தூரி ரங்கநாதப் பெருமாள் திருக்கோயில். இந்த ஊர் மன்னார்குடி - திருத்துறைப்பூண்டி சாலையில், மன்னார் குடியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கோட்டூருக்கு அண்மையில் முள்ளியாற்றின் கரையோரத்தில் அமைந்துள்ளது. ஸ்ரீமணவாளமாமுனிகள் அவதரித்த பாலூர் வம்சத்தவர்களால் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்குமேல் ஆராதிக்கப்பட்டு வந்த பெருமாள் இவர். இந்தத் திருக்கோயிலில் ஸ்ரீகஸ்தூரிரங்கநாதப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி ஸேவை ஸாதிக்கிறார். திருமார்பில் யோகலக்ஷ்மியோடும், உபயநாச்சிமார்களோடும் உத்ஸவர் ஸ்ரீகஸ்தூரி ரங்கநாதன் ஸேவை ஸாதிக்கிறார். திருவடி, நம்மாழ்வார், உடையவர், மணவாளமாமுனிகள் ஆகியோருடைய மூலவிக்ரஹங் களோடு திருவடி மற்றும் ஸ்ரீமணவாளமாமுனிகள் ஆகியோரின் உத்ஸவ விக்ரஹங்கள் எழுந்தருளப்பண்ணப்பட்டுள்ளன. நாகபர்யங்கத்தில் கால் கட்டைவிரலை வாயில் வைத்து சுவைத்துக்கொண்டு தவழும் ஆலிலை கிருஷ்ணன் எழுந்தருளியுள்ளார். இவரைக் கையில் எழுந்தருளப்பண்ணி முக்தக ச்லோகங்களைச் சொன்னால் அனைத்து விருப்பங் களும் நிறைவேறும். திருவடியாகிய ஆஞ்சநேயர் கையில் தாங்கிய கதையுடனும், கூப்பிய கரங்களுடனும் ஸேவை ஸாதிக்கிறார். இது மற்றைய திருக்கோயில்களில் காணக் கிடைக்காத திருக்கோலமாகும். வேண்டும் வரங்களைத் தரும் வல்லமை படைத்தவர் இவர்.

இத்தகைய பெருமைகள் ஒருங்கே அமைந்துள்ள இந்தத் திருக்கோயிலில் ஆகம ரீதியான திருவாராதனங்களும், அமுது படிகளும் பலஆண்டுகளாக ஸமர்ப்பிக்கப்படவில்லை. அந்தக் குறை நீங்க ஆகமம் பயின்ற அர்ச்சகர் ஒருவர் கோயில் கைங்கர்யங்களை மேற்கொண்டிட தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். பல ஆண்டுகளாக ஆகம ரீதியிலான திருவாரா

தனங்கள் நடைபெறாமல் நின்றுபோனதால் மீண்டும் லகுஸம்ப்ரோக்ஷணமும் (எளிய முறையிலான கும்பாபிஷேகமும்), ஸ்ரீஸுர்சன ஹோமமும் 14.2.2013 அன்று மேற்கொள்ளப்பட்டது. 15.3.2013 தொடங்கி தினந்தோறும் காலை 8 மணிக்கு பசுமாடு முன் நிற்க விச்வரூப தரிசனம், 9மணிக்கு காலைதிருவாராதனம், திருப்பாவை அநுஸந் தானம், ப்ரஸாத விநியோகம், 10மணிக்கு மதிய திருவாராதனம், ஸுத்த அன்னம் அமுதுபடி கண்டருளுதல், மாலை 4 மணிக்கு ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமபாராயணம், நித்யாநுஸந்தானம், சுண்டல் விநியோகம், இரவு 8 மணிக்கு ஸுத்த அன்னம் அமுதுபடி கண்டருளுதல், அரவணைப்பால் ஆகிய ஆராதனங்களும் அமுதுபடிகள் ஸமர்ப்பணையும் மேற்கொள்ளப்படவுள்ளன

திருமடைப்பள்ளி புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அனைத்துப் ப்ரஸாதங்களும் திருமடைப்பள்ளியில் தயார் செய்யப்பட்டு பெருமாளுக்குக் கண்டருளப்பண்ணப்பட்டு வருகிறது. இதுதவிர பெருமாள் பிரதிஷ்டை கண்டருளின நாளான ரேவதியன்று விசேஷ திருமஞ்சனம், அமுதுபடிகள் ஸமர்ப்பிக்கப் படவுள்ளன. ஒரு கிராமத்துக் கோயிலில் ஆராதனங்கள் எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென்பதற்கு ஒரு முன்னோடித் திருக்கோயிலில் கீழைப்பனையூர் ஸ்ரீகஸ்தூரி ரங்கநாதப் பெருமாள் திருக்கோயில் (Model Village Temple) மாற்றம் பெறவுள்ளது. 14.3.2013 அன்று கீழைப் பனையூர் மற்றும் அதைச் சுற்றி அமைந்துள்ள பல்வேறு கிராமங்களில் வாழும் மக்களின் நலன்கருதி இலவச மருத்துவ முகாம் ஒன்று நடைபெற்றது. சுமார் 400 நோயாளிகள் மிகச்சிறந்த மருத்துவ ஆலோசனையைப் பெற்று பயன்பெற்றனர். இந்த மருத்துவ முகாமிற்கு, தஞ்சாவூர் வாசன் கண் மருத்துவமனை மற்றும் பல் மருத்துவமனை, திருச்சி மாருதி மருத்துவமனை, ஈரோடு HCG புற்றுநோய் மருத்துவமனை ஆகிய மருத்துவமனை களிலிருந்து தேர்ச்சிப்பெற்ற மருத்துவர் கள் வருகை தந்து பரிசோதித்தனர். வறுமைக் கோட்டின் கீழ்வாழ் மக்களுக்கு, மேற்கொண்டு சிகிச்சை உரிய மருத்துவமனைகளில் பெற்றிட மருத்துவர்களால் ஆலோசனை வழங்கப்பட்டது.

***

# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 164இன் தொடர்ச்சி.  ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

## அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் என்பது, களவை முறையே வெளிப்படுத்தி நிற்றல். முறையே வெளிப்படுத்தி நிற்றலாவது, தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும், பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்கும் என்று கொள்க. அறத்தொடு நிற்றற்குப் பொருள், முறையே வெளிப்படுத்தி நிற்றல் என்பது. இப்பொருள் எவ்விடத்திற்கு மாகாது, இவ்விடத்திற்குமாத்திரம் என்று கொள்க. என்னை, இக்களவொழுக்கம் புனைந்துரையாற் புலவரால் நாட்டப்பட்டதன்றி வேறன்று என்பது. ஆதலால், இக்களவு வெளிப்படுத்தற்கு மாத்திரமே அறத்தொடு நிற்றல் என அவரால் நாட்டப்பட்ட பெயராயிற்றெனக் கொள்க.

**'முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்**
**கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே.'**

என்னுஞ் சூத்திரவிதியான், அறத்தொடு நிற்றல் இருவகைப்படும்.

## 282. கையறு தோழி கண்ணீர் துடைத்தல்:

கையறு தோழி கண்ணீர் துடைத்தல் என்பது, ஆற்றிக் கையற்ற தோழி அருகிருந்து கண்ணீர் துடைத்தல்; கையறல் செயலறல்.

வரைவுமலிவான் மனமகிழ்ச்சியடைந்திருக்கும் தலைவி அழுதுகொண்டிருத்தல் மாறுபாடு எனின்; மாறுபடாது என்னை களவுப் புணர்ச்சியால் அலர் மிகவும் எழுதல் கண்டு தந்தையர்

முதலாயினோர் வெறுப்படைந்தை அறிந்த தலைவன் பிரிந்தேகப், பிரிவாற்றாமல் தலைவி அழுதனள் என்க. வெறுப்படைந்ததனால் மணத்தை மறுக்க, அதனால் தலைவன் பிரிந்தேக ஆற்றாமையினால் தலைவி அழுதனள் என்று செய்யுளிற் கூறியதின்றெனின், மேலே, 'கற்பொடுபுணர்ந்த கவ்வை'யின் மகள் எங்கே போயினாள் என்று செவிலி பாங்கியை வினாவுழி' 'வெறுத்தா ரொறுத்துரை மேலுநங் கேளிர் விழைதலின்றி, மறுத்தா ரவற்கு மணமதனால்' என்பதனாற் கண்டுகொள்க.

தையலே! நீ உளங்குழைந்து கலுழக் காரணம் என்னை, நுண்மணலார்ந்த திரைவந்து உன் வண்டலம்பாவை யழித்தனவோ, ஒருகாலுஞ் சினவாத அன்னை சினந்தனளோ, யான் அறியக் கூறுவாயாக என்றவாறு.

அயிர் - நுண்மணல். வண்டலம்பாவை - மண்ணாற் செய்த பாவை. செயிர்த்தல் - சினத்தல். வயிர் - போர்க் களத்தில் ஒலிக்கும் கொம்பு. நரலுதல் - ஒலித்தல், கலுழ்தல் - அழுதல். என் - யாதுகாரணம்.

## 283. தலைமகள் கலுழ்தற்காரணங் கூறல்:

தாரை அழகாகக்கொண்ட இருதோளையுடைய ஒருவர் தனித்தவிடத்து என் வாரணிந்த கொங்கையைக் கூடிச் சென்றார்; வேல்போன்ற விழியையும் வண்டினஞ் சூழ்ந்த மேகத்தின் அழகைக்கொண்ட மெல்லிய குழலையும் உடையாய்! யான் அழுங் காரணம் அது என்றவாறு.

## 284. தலைவன் தெய்வங் காட்டித்தெளிப்பத் தெளிந்தமை யெய்தக் கூறல்:

தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல் என்பது, தலைவன் தெய்வத்தைக் காட்டிக் கரியென்று சூளுறவு சொல்ல, மெய்யென்று தெளிந்து அதனைப் பாங்கிக்குப் பொருந்தக் கூறல்.

நெய்தற் பூவினிடத்துப் பொதிந்த தேனைநுகர்ந்து பிரிந்து போங் கழிக்கரைச் சோலையுடைய புலம்பர் வந்து துதித்துத் தெய்வத்துடனே சூளையும் உற்றேன் என்று அவர் சொன்ன



சொல்லை மெய்யாய் மதியிலியாகிய யான் மறந்து மதித்தேன் என்றவாறு.

சூள் - ஆணைகூறல். அயர்ந்து - மறந்து. தேனினம் - வண்டினம். நகை - ஒளி. பொதிதல் - நிறைதல். வண்டினம் - தலைவனாகவும், நெய்தற்பூ தானாகவும், தேன் தன்னிடத்து இன்பமாகவும், அவ்வண்டு தேன் நுகர்ந்து நீங்கியதுபோலத் தலைவன் தன்னிடத்து இன்பம் நுகர்ந்து பிரிந்து போயினான் என்னும் உள்ளுறையுவமம் கொள்ளக்கிடந்தது. இவ்வாறு தெய்வத்தொடு சூளும் உற்றேன் என்று சொல்லியது எக்கிளவிப் பொருள் எனின், வன்புறையில், 'பிரியேன்' என்னும் கிளவியிலென்று உணர்க. ஆணைகூறல் அக்கிளவிச் செய்யுளில் இல்லையாலெனின், 'பிரியேன்' என்றது வேறோர் கிளவியினும் இல்லையால், அதுவே பொருள் என்று உணர்க.

## 285. இறைவி தலைவன் இகந்தமை இயம்பல்:

இறைவி தலைவன் இகந்தமை இயம்பல் என்பது, இறைவி தலைவன் நீங்கின்மை கூறல்.

## 286. பாங்கி இயற்பழித்தல்:

பாங்கி இயற்பழித்தல் என்பது, தலைமகன் இயலைப் பாங்கி பழித்துக் கூறல்.

உலகமுழுதும் தொழத்தக்க தெய்வத்தை நோக்கிப் பிரியேன் என்று சொல்லியும் இளமைப் பருவத்தே துறந்து மறந்தவர்போல நீ அழத்தக்கதாகத் துறந்து போயினாராதலால் அவ்வாடவர் நல்லர் நல்லர் என்றவாறு.

## 287. தலைமகள் இயற்பட மொழிதல்:

தலைமகள் இயற்பட மொழிதல் என்பது, அங்ஙனங் கூறக்கேட்ட தலைமகட் சொற்பொருள் ஓரியல்புபட மொழிதல்.

புன்னைமரத் தடியிலிருக்கும் புகராகிய சிவந்தநிறப் புள்ளியையும் பசிய காலையும் உடைய ஆண்ஞெண்டு நாகுப்பருவத்தையுடைய வளமையையும் தட்பத்தையுமுடைய

குளிர்ந்த கமுகினிழலில் பெடைஞெண்டைப் பிரியாமற் கூடும் புலம்பரைப் பொல்லாராகக் கருதின் நமக்கு இனியராயுள்ளார் இனி யார் என்றவாறு.

அவரே நமக்கு இனியராய் வந்து கூடுவாராதலால் அவரை இயற்பழித்துக் கூறத்தகாது என்றவாறாயிற்று.

புன்னைமர நிழலிலிருக்கும் ஆண்ஞெண்டு பூகமர நிழலிலிருக்கும் பெடையொடு கூடும் புலம்பர் என்பதனால், தலைவன் தலைவியை வந்து கூடுமென உள்ளுறை யுவமங்கொள்ளக் கிடந்ததெனின், அங்ஙனங் கூட்டம் பெறாளாய்ப் பிரிந்து வருந்துகின்றாளாதலால் உள்ளுறை யுவமமாகாது இறைச்சியிற் பிறக்கும் பொருளாயிற் றெனக் கொள்க. இறைச்சியிற் பிறக்கும் பொருளாவது.

**'இறைச்சி தானே பொருட்புறத்ததுவே.'**<br>
**'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே**<br>
**திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே.'**

என்றரார் ஆகலின், 'இறைச்சி' யென்றும் 'இறைச்சியிற் பொருள்' என்றுங் கூறிய சூத்திரங்கட்கு நச்சினார்க்கினியர் செய்தவுரையிற் கண்டுகொள்க.

## 288. தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்:

தெய்வம் பொறைகொளச் செல்குவம் என்றல் என்பது, தெய்வத்தின் முன் பிரியேனென்று ஆணைகூறிப் பிரிந்து போனாரால் தெய்வங் கொடுந்தெய்வமாதலால் சீறாதபடி அவர் எங்கட்குக் குற்றஞ் செய்தார் அல்லர், நீ பொறுத்துக்கொள் என்று வேண்டிக் கோடற்கு-இருவேமும் போதுவோம் என்று தலைவி பாங்கியுடன்கூறியது.

## 289. இல்வயிற்செறித்தமை செப்பல்:

இல்வயிற் செறித்தமை செப்பல் என்பது, தலைவி தன் மெய் வேறுபாட்டாலும் ஊரிலுள்ளார் அலர்தூற்றலாலும் நற்றாய் உளத்தில் வெறுப்பாகி மனையிடத்தில் என்னைக் காவல் செய்தாளென்று பாங்கிக்குக் கூறல்.



## 290. செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்:

செவிலி கனையிருள் அவன் வரக் கண்டமை கூறல் என்பது, செவிலி செறிந்த இருட்குறியிடத்துத் தலைவன் வரக்கண்டாள் எனத் தலைவி பாங்கிக்கு உரைத்தல்.

## 291. செவிலி தலைமகள் வேற்றுமைகண்டு பாங்கியை வினாதல்:

பொன்போன்ற பசலைநிறம் பொருந்திய கொங்கையும் முத்துப்போல நீருற்ற கண்ணும் இப்போது கண்டேன்; அதுவன்றியும் யான் சொல்லுஞ்சொல்லும் இனிய பாலும் உட்கொள்ளான்; புனங் காவலிருந்தபின் என் மான்போன்றவட்கு யாதுற்றதென்று யான் அறியேன், என்றவாறு.

## 292. பாங்கி வெறிவிலக்கல்:

பாங்கி வெறி விலக்கல் என்பது, செவிலி வெறி யாட்டாளனை யழைத்து மகட்கு நோயுற்றவாறும், அது தீருமாறும் சொல்ல வேண்டுமென்று கேட்புழி, தெய்வம் வந்தாடும்போது, பாங்கி அத்தெய்வத்தை ஆடவேண்டா என்று விலக்குதல்.

வெறியாட்டாளன் ஆடு பலிகொடுத்தால் தீரும் என்புழி, அவ்வாட்டைக் கொல்லாமல் விலக்கல் எனினும் அமையும்.

## 293. வெறிவிலக்கியவதனாற் செவிலி பாங்கியை வினாதல்:

உமையாள் மகனைப் பண்குறைய வென்ற சொல்லை யுடைய வள்ளிக்கு நாயகனைப் பசிய மாலைசூடிய வேலினாலே வெண்குன்றமாகிய குருகுபெயர்க் குன்றத்தை யெறிந்த செவ்வேளை மங்கையர் முன்னர் இவ்வாறு நீ விளம்பியது என்ன? என்றவாறு.

## வெறிவிலக்கு பற்றிய மேலும் பலகுறிப்புகள்:

வெறியாட்டு நிகழுமிடத்துத் தலைவி, தோழி, செவிலி

ஆகிய மூவருக்கும் கூற்று நிகழும். இதனைக் கீழ்வருமாறு தொல்காப்பியம் இலக்கணப்படுத்துகின்றது.

**வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்**
**- தொல்காப்பியம் பொருள் 106**
**அவள்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்**
**- தொல்காப்பியம் பொருள் 112**
**கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்**
**- தொல்காப்பியம் பொருள் 113**

இவை மேற்சொன்ன மூவருக்கும் கூற்றுநிகழிடங்களை விளக்கும்போது களவியலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**வெறி என உணர்ந்த வேலன் நோய் மருந்து**
**அறியான் ஆகுதல் அன்னை காணிய**
**- குறுந்தொகை 360**

எனத் தலைமகன் சிறப்புறைத்தானாக, வெறி அஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய் தலைவி சொல்லுகிறாள்.

**பெய்ம்மணல் வரைப்பில் கழங்கு படுத்து அன்னைக்கு**
**'முருகு' என மொழியும் வேலன்; மற்று - அவன்**
**வாழிய - இலங்கும் அருவிச்**
**சிமலை நாடனை அறியாதோனே!**
**(ஐங்குறு நூறு-249)**

என வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய்க்குத் தலைவியின் மாற்றத்துக்குக் காரணமானவனை அறிவிக்க முயலுகின்றாள் தோழி.

**அருவி யின்னியத்து ஆடுநாடன்**
**மார்பு தர வந்த படர்மலி யருநோய்**
**நின்னணங்கு அன்மை யறிந்தும், அண்ணாந்து**
**வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்**
**கடவு ளாயினும் ஆக**
**மடவை மன்ற வாழிய முருகே**
**(நற்றிணை-34)**



எனத் துணிந்து கூறித் தோழி வெறி விலக்குவதை நற்றிணைப் பாடல் காட்டும்.

திருவாய்மொழியிலும், திருவிருத்தத்திலும் வெறிவிலக்கு என்னும் துறையிலமைந்த பாடல்கள் உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு:

**" இதுகாண்மின் அன்னைமீர்! இக்கட்டுவிச்சிசொற்கொண்டு நீர்**
**எதுவானும் செய்தங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்**
**மதுவார் துழாய்முடி மாயபிரான்கழல் வாழ்த்தினால்**
**அதுவே யிவளுற்ற நோய்க்கும் அருமருந் தாகுமே"**
**(திருவாய்மொழி 4-6-3)**

**"ஒருங்காக வேயுல கேழும் விழுங்கி உமிழ்ந்திட்ட**
**பெருந்தேவன் பேர் சொல்ல கிற்கில் இவளைப் பெறுதிரே"**
**(திருவாய்மொழி 4-6-4)**

**"என்மொழி கேண்மின் என் அம்மனை மீர்! உல கேழுமுண்டான்**
**சொல்மொழி மாலையந் தண்ணந் துழாய்கொண்டு சூட்டுமினே"**
**(திருவிருத்தம்-20)**

இவை வெறிவிலக்குவிக்கும் முறைமை அகமரபி னின்றும் வேறுபடுகின்றது என்பதற்குப் போதுமான சான்றுகளாகும். பக்தி இலக்கிய நாயகியின் துயர், கண்ணனைப் போற்றும் பாடல்களைக் கேட்ட அளவிலும், அவன் திருநாமம் கேட்ட அளவிலும், அவனது திருத்துழாய் மாலை சூட்டிய அளவிலும் தணிக்கப்படுகின்றது. அகப்பொருள் தலைவியின் நிலை அத்தன்மைத்து அன்று.

அகப்பொருளைச் சார்ந்த வெறிவிலக்கல் துறை காப்பியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், புராணம் போன்ற வற்றுள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தனித் தனிப் பாடல்களாகவும் பாடப்பெற்றமையைத் தனிப் பாடல் திரட்டுவழி அறியலாம். காலவெள்ளத்தில் அதன் நோக்கமும் பாடுவோருக்கும் அவைக்கும் ஏற்ப திசைதிருப்பப் பட்டது.

**294. தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்:**

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் என்பது, பூவைக் கொடுத்ததனாற் புணர்ந்த களவை வெளிப்படுத்திக் கூறல்.

**295. புனல்தருபுணர்ச்சியில் அறத்தொடுநிற்றல்:**

புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடுநிற்றல் என்பது, புனலாற் கூடும் புணர்ச்சியை வெளிப்படுத்திக் கூறல்.

**296. களிறுதருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்:**

களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் என்பது, களிறு தரு புணர்ச்சியாற் களவை வெளிப்படுத்தல்.

**297. தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினாதல்:**

வண்டார்ந்த குழலையுடையாளது நிறமும் கண்ணும் முன்னாள் கண்டார்க்கு இப்போது வேறுபட்டிருத்தலால் அறியுந்தன்மையனவேயல்ல; இவ்வடிவு வேறுபடுதற்குக் காரணம் ஒன்று உண்டு, ஆதலால் அக்காரணத்தை ஐயுறாமல் எனக்கு உரைப்பாய் என்றவாறு.

**298. செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடு நிற்றல்:**

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடு நிற்றல் என்பது, முன்னிலைப் புறமொழியால் உணர்த்தாது, முன்னிலை மொழியினாலே களவை வெளிப்படுத்திக் கூறல்.

நல்ல நுதலையுடையாய்! புனங் காக்குநாளில் ஒரு தலைவர் வந்து இங்கோர் கலை வந்ததோ என்று வினாவி, நம்முடைய பெண்ணுக்கு முலைவந்ததோ இல்லையோ என்னும் பெதும்பைப் பருவத்து முயங்கினர் என்றவாறு.

'தலைவி பாங்கிக்கு முன்னிலைமொழியால் அறத்தொடு நிற்ற'லும் 'செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடு நிற்ற'லும் ஆகிய இரண்டும், 'பூத்தரு புணர்ச்சி'



முதல் மூன்றும் முன்னிலைமொழி, 'வெறிவிலக்கல்' ஒன்றும் முன்னிலைப்புற மொழி.

## அறத்தொடு நிற்றல் பற்றிய மேலும் பல குறிப்புகள்

களவியலில் தாழி கூற்று நிகழிடங்களைக் கூறும் தொல் காப்பியர் முன்னிலை வகையிலும் அறத்தொடு நிலையிலும் குற்றந் தீர்த்த கிளவியைத் தாய் மாட்டுப் புகவிடுதலும் தோழிக்குரியது என்பர்.

**"முன்னிலை அறனெனப் படுதல் என்று இருவகைப்<br>புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்"<br>(தொல்.பொருள்-தோழிக்கு நிகழும் கூற்று)**

எனத் தோழிக்குரியதாக அறத்தொடு நிற்றலையும் அதனைக் கேட்போராகத் தாயையும் காட்டுவர். அறத்தொடு நிற்றலை,

**"எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்<br>கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு<br>உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ<br>அவ்வெழு வகைய என்மனார் புலவர்"<br>(தொல்.பொருள்-204)**

என ஏழு வகைப்படுத்துவர். அதாவது தலைவன் தன்மாட்டு எளியனென்று கூறுதல், தலைவனை உயர்த்திக் கூறுதல், தலைவன் மாட்டுத் தலைவி வேட்கையும் தலைவிமாட்டுத் தலைவன் வேட்கையும் கூறுதல், தலைவியைத் தலைவற்குக் கொடுக்க வேண்டுமென்பது படக்கூறுதல், வெறி யாட்டுங் கழங்கும் இட்டுரைத் துழி வேலனோடாதல் பிறரோடா தல் தோழி உசாவுதல், யாதானும் ஓர் ஏதுவை இடையிட்டுக் கொண்டு தலைப்பட்டமை கூறுதல், உள்ளபடி கூறுதல் என்னும் முறையில் தோழி அறத்தொடு நிற்பாள்.

எட்டாம் பத்து 8ஆம் திருவாய்மொழி 'கருமாணிக்க மலைமேல்' பதிக உரையில் நம்பிள்ளை இச்செய்தியினைத் தொகுத்து தந்துள்ளார்.

**ஈடு:** திருப்புலியூரில் எம்பெருமானோடே இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, அவனாலே கொள்ளப்பட்ட மனத்தினையுடையளாய் இருக்கிறபடியை உயிர்த்தோழியானவள் கண்டு, இவள் வடிவில் வேறுபாட்டாலும் சொற்களின் வேறுபாட்டாலும் புணர்ச்சி உண்டானமையை அறிந்தாள்; இவற்றில் ஒன்றையும் அறியாதே, ‘என்னுடைய தந்தையாரான ஜனகமஹாராஜர், கணவனுடைய கலவிக்குத் தகுந்த என் வயதைப் பார்த்து’ என்கிறபடியே, தகுந்த இளமைப் பருவமுடையவள் என்னும் இவ்வளவே கொண்டு, தந்தை முதலியோர் ‘சுயம் வரத்துக்கு இராஜபுத்திரர்கள் வருவது’ என்று நகரத்திலே மணமுரசு அறைவிக்க, அதனைக் கேட்ட தோழியானவள், ‘பரதன் ராஜா’ என்று அறைவித்த முரசஒலி செவிப்பட்டபோது ஸ்ரீபரதாழ்வான் பட்ட எல்லாம் பட்டு, ‘இம்முரச ஒலி பெண்பிள்ளை செவிப்படுமாகில் மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழாத தன்மையளாய் இருக்கிற இவள் உயிர் தரியாள்; ஏற்கவே தடுக்க வேண்டும்; அது செய்யுமிடத்தில் திருப்புலியூர் நாயனாரோடே புணர்ச்சி உண்டானமையை அறிவிப் போமாகில் நம் காவற்சோர்வாலே வந்ததாம் என்றாம்; அறிவியாது ஒழியில் இவள் வாழாள்; இனி, இவ்வளவில் செய்வது என்?’ என்று பார்த்தாள்.

அங்ஙனம் பார்த்தவள், ‘‘இவர்கள்தாமும் ‘இவளுக்கு வடிவிலே ஒரு வேறுபாடு உண்டு; இதற்குக் காரணம் யாதோ?’ என்று விசாரியாநின்றார்கள்; நாமும் இவர்கள் தம்மோடே ஆராய்வதிலே இழிந்து அவ்வழியாலே அறிந்தோமாய் இதனை விலக்க வேண்டும் என்று அறுதியிட்டுக் கொண்டு, ‘இவள் வடிவு இருந்தபடியால் இவளுக்குத் திருப்புலியூர் நாயனாரோடே புணர்ச்சி உண்டாயிற்றுப்போலே இருந்தது; அவனுடைய குணங் களையும் செயல்களையுமே வாய் புலற்றாநின்றாள்; நீங்கள் செய்கிறவற்றைத் தவிருங்கோள்,’’ என்று அறத்தொடு நிற்க எண்ணினாளாய், ‘இது தருமம் அன்று’ என்ன, ‘ஆனால், நீ சொல்லுகிற திருப்புலியூர் நாயனாருக்கு இவளுக்குத் தகுதியான சிறப்பு உண்டாக வேண்டும்; ஒப்பனையும், ஆண்மையும் குண மும், செல்வமும், கொடையும், காதலும் உண்டாக வேண்டும்; நல்ஒழுக்கமுடையனாக வேண்டும்; இவை எல்லாம் உளவோ?’



என்ன, கூறுகிறாள் மேல்: ‘நீங்கள் கேட்கிற அளவு அன்று: இவை எல்லாம் குறைவு அற்றவன்: இவை ஒன்றும் இல்லையே யாகிலும், இவள்தான் திருப்புலியூர் நாயனாருக்கே உரியவள் ஆனாள்; நீங்கள் செய்கிற இவற்றைத் தவிர்மின்’ என்று அதனை விலக்குகிறாள். இது, ‘மணவிலக்கு’ என்பது ஒரு கிளவித்துறை ஆகும்.

திருமங்கையாழ்வார் தலைவி நிலையில் நின்று தோழிக்கு அறத்தோடு நிற்பதாக அமைந்த பாசுரங்கள் சில பின்வருமாறு.

**ஒரு கையில்சங் கொருகைமற் றாழியேந்தி**
**உலகுண்ட பெருவாயர் இங்கேவந்து என்று**
**பொருகல்கண் நீரரும்பப் புலவிதந்து**
**புனலரங்கம் ஊரன்று போயி னாரே.**
**(திருநெடுந்தாண்டகம் – 24)**

**என்னலனும் என்னிறைவும் என்சிந்தையும்**
**என்வளையும் கொண்டு என்னை யாளுங் கொண்டு**
**பொன்னலர்ந்த நறுஞ்செருத்திப் பொழிலினூடே**
**புனலரங்கம் ஊரன்று போயினாரே.**
**(திருநெடுந்தாண்டகம் – 25)**

இப்பாசுரங்கள் தலைவன் தோற்றப்பொலிவையும், தலைவி நலனிழத்தலையும் தலைவன் ஊரையும் எடுத்து மொழி கின்றன.

**யாதானும் ஓராக்கையில்புக்கு அங்காப்புண்டும்ஆப்பவிழ்ந்தும்***
**மூதாவியில்தடுமாறும் உயிர்முன்னமே* அதனால்**
**யாதானும்பற்றி நீங்கும்விரதத்தைநல்வீடுசெய்யும்**
**மாதாவினைப்பிதுவை * திருமாலைவணங்குவனே.**
**(திருவிருத்தம் – 95)**

நம்மாழ்வார், வெண்ணெய் உண்ட கண்ணன் தன்னை நயந்ததைத் தலைவி தோழியிடம் சொல்லி அறத்தோடு நிற்பதாக உள்ளது.

**அறத்தொடு நிற்றல் முற்றிற்று.**
**இத்துணையும் ஐம்பத்திரண்டாநாட் செய்தியென்றுணர்க.**

## III. உடன் போக்கு.

**உடன் போக்கு:-** தலைவன் முயற்சியினாலும், தலைவியின் உண்மை பலரும் அறிதலாலும் மணம் நிகழும். சில சமயங்களில் இருவருக்கும் மணஞ் செய்ய தமர் விருப்பங் கொள்ளார். அவ்வமயம் ஒருவருமறியா வண்ணம் தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் செல்லுவன்.

**தோழி:-** அழகிய நாட்டையுடையவரே, எம் தலைவிக்காக நீர் எத்துணைச் சிறந்த பரிசில்களைத் தரினும் எம்மனோர் ஏற்றுக்கொள்ளார்! தலைமகளுக்கு இப்போது மணஞ் செய்ய அவர்கள் மனம் இசைந்திலது. அவளை நீர் உம்முடன் உம்மூருக்குக் கொண்டு போதலே தற்சமயம் செய்யத் தக்கது. இன்றேல் நீர் அவளை மணம் புரிதற்கு வேறு வழியில்லை.

**தலைவன்:** - அழகிய வளையினையுடையாய், என் ஊரோ மிக்க தூரத்திலுள்ளது. இடையில் பேய், புலி முதலியன நிறைந்த கொடிய காடுகளும், பாலை நிலமும் உள்ளன. உன் தலைவியோ மெல்லிய தன்மை வாய்ந்தவள். இம்முறையில் யான் அவளைக் கொண்டு போதல் யாங்ஙனம்?

**தோழி:** - என் தலைவி தன் உயிரைக் காட்டிலும் உம்மை உயர்வாக நினைத்திருக்கின்றனள். ஆதலின் உம்முடன் வரும் போது அவைகள் அவளுக்குச் சிறிதும் துன்பத்தைத் தாராமல் இன்பத்தையே தரும்.

**தலைவன்:-** அனிச்சமலர் போன்ற அடிகளுடைய உன் தலைவியை அழலெனக் காலும் பாலையில் கொண்டுபோக யான் நினைப்பது கொடிதினும் கொடிதே. ஆயினும் வேறு வழியின்மையின் உடன்படுகின்றேன்.

தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துப் போக உடன்பட்டதைத் தோழி தலைவிக்குத் தெரிவித்தனள். உயிரினும் சிறந்த நாணத்தை இன்று துறத்தற்காயிற்றே, இனி இத்தகைய பெண் பிறவி நேரதிருத்தலே நலம், என்று எண்ணித் தலைவியின் மனம் பெரிதும் இரங்கிற்று. அதனை உணர்ந்த தோழி, "உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்ததெனின்,



நாணத்தைக் காட்டிலும் கற்பு சிறந்தது. ஆதலின் அவர் பின் படாலே உன் கடமை" எனத் தலைவிக்கு அறிவுறுத்தினள். ஊரார் வசைச் சொல்லையும், தாயார் சினத்தையும் பொறுக்கலாற்றாமையின் தலைவனுடன் போகத் தலைவியின் மனம் உடன்பட்டது. செல்லும் வழியிலுள்ள சுரத்தின் கொடுமையைத் தோழி தலைவிக்குச் செப்பினள். அச்சுரத்தின் கொடுமை தாயின் சினச் சொற்களைக் காட்டிலும் கொடிதாயிராது எனத் தலைவி விடையிறுத்தனள் தோழி தலைமகளைக் கொண்டு போய்த் தலைமகனிடம் ஒப்புவித்து, "இவள் உன் அடைக்கலம், இனி இவளுக்கு யாவரும் நீயே. இன்று போன்றே என்றும் இவள்மாட்டு நீ அன்பு பூண்டொழுதல் வேண்டும். நீங்கள் சுகமே செல்லுங்கள். இங்குள்ளோருக்குச் சிறிது மன ஆறுதலைக் கூறிவிட்டு யானும் உம்முடன் வருகிறேன்" எனத் தலைவனுக்குக் கூறி அவர்களைச் செல்ல விடுத்தனள்.

ஐம்பத்து மூன்றாம் நாள் தலைவன் தலைவியைப் பாலையின் வழி மெதுவாக அழைத்துச் சென்றான். தலைவிக்குச் சிறிது தளர்ச்சி ஏற்பட்டது. ஆதலின் ஒரு மரத்தினடியில் இருவரும் இளைப்பாறினர். தலைவன் அங்குள்ள அழகிய மலர்களைக் கொய்து தலைவியின் கூந்தலில் சூட்டி மகிழ்ந்தான். "இவ்விருவரும் தேவரோ, அன்றி மானிடரோ" எனக் கண்டோர் அயர்ப்புற்றனர். அவர்களுக்கு அத்தலைவர்களிடம் அன்பு பெருகிற்று. ஆதலின், அவர்கள் அவ்விரவில் கொடிய பாலை நிலத்திற் செல்லுதலை யொழித்துத் தங்கள் வீட்டிலிருந்துண்டு மறு நாள் விடை கொள்ளுமாறு அவர்களை வேண்டினார்கள். ஆனால் அப்போதே தன் பதிக்குச் செல்ல தலைவனின் மனம் விழைத்தது. அங்ஙனமே வழிக்கொண்டான். வழிச் செல்வோர் செப்பிய குறிப்பால் தலைவன் ஊர் அணித்தாயுள்ளதெனத் தெரிந்தது. தன்னாட்டை அடைந்தபின் தலைவன் தலைவிக்குத் தன் ஊரிலுள்ள இடங்களையும், அழகுகளையும் காட்டிக் காட்டி மகிழ்ந்தான். அதனால் தலைவிக்கு வழி நடந்த இளைப்பு நீங்கிற்று.

## உடன்போக்கு பற்றிய மேலும் சில குறிப்புகள்

தொல்காப்பியம் தோழி, கண்டோர், தலைவன், செவிலி ஆகியோர் கூற்றுக்குரிய சூழலின் உடன் போக்கைப் பின்வருமாறு மொழிகின்றது.

**"போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்"**
**"சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்**
**கண்டோர் மொழிதல் கண்டது என்ப"**
**"ஒன்றிய மொழியோடு வலிப்பினும் விடுப்பினும்**
**இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்**
**கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்தி"**
**"போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழி இக்**
**கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்"**

சங்க அக இலக்கியம் உடன்போக்கில் பல பாடல் களைக் கொண்டுள்ளது. உடன்போக்கில் செல்லும் தலைவி சிலம்பு கழித்தும் (நற்.12) சிலம்பு கழிக்காமலும் (அகம்.383) செல்வதுண்டு, அம்சிலம்பு ஒடுக்கி அஞ்சிவந்து, துஞ்சி ஊர் யாமத்து முயங்கும் (அகம்.198. 10-11) தலைவி தலைவனுடன் செல்வதைப் அப்பாடலடிகள் காட்டும்.

தொல்காப்பியர் உடன்போக்கைக் கற்பிற்குரியதாகக் காட்டுவர். அதனை மறைவெளிப்படுதல் (தொல்.பொருள்.நூ.488) என்ற தொடரால் அறியலாம். எனினும் இத்துறையைக்களவுக் குரியதாகக் காட்டுவர் அறிஞர். மேலும் அவர் உடன்போன தலைமகள் மீண்டு வந்தடவுடன் நின் ஐயன்மார் பின்பற்றி வந்தபோது இடைச்சுரத்து நிகழ்ந்தது என்ன? (ஐங், 312,322,361,383,384) என்ற துறையைப் பற்றி புதுமையதாகச் சுட்டுவர்.

பக்தி இலக்கியத்தில் மாயவன்பின்சென்ற மகளை நினைந்த தாயின் புலம்பலைக்காணலாம். இல்லம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. என் மகளை எங்கும் காணேன். கண்ணன் பின் போய் மதுரைப்புறத்தே புக்காளோஎன்றும்,



**ஒருமகள் தன்னை யுடையேன்**
**உலகம் நிறைந்த புகழால்**
**திருமகள் போல வளர்த்தேன்**
**செங்கண்மால் தான்கொண்டு போனான்**
**(பெரியாழ்வார் திருமொழி 3-8-4)**

என்று புலம்புகின்றாள்.

**கள்வன்கொல்? யான் அறியேன்**
**கரியானொரு காளைவந்து**
**வள்ளிமருங்குல் என்தன்**
**மடமானினைப் போதஎன்று**
**வெள்ளி வளைக்கைப்பற்றப்**
**பெற்றதாயரை விட்டகன்று**
**அள்ளலாம் பூங்கழனி**
**யணியாலி புகுவர் கொலோ?**
**(பெரிய திருமொழி 3-7-1)**

என உடன்போக்கிற் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்குவதாக திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். உடன் போக்கிற்சென்ற மகளின் வாழ்வையும் நினைத்துப் பார்க்கும் தாய் செங்கண்மாலுடன் சென்ற என்மகளை அசோதை வரவேற்றிருப்பாள். அவள் மாமன் நந்தகோபாலன் தழுவிக் கொண்டிருப்பான். அவர்கள் வீட்டில் கண்ணுறங்காமல் இருந்து என்மகள் தயிர் கடைய வல்லளோ, எனத் தன் எண்ணத்தை வெளிப்படுத்துகின்றாள். இதன் மூலம் மானுட வாழ்க்கையினின்று முற்றிலும் விலகிச் செல்வன பக்திப்பாடல்கள், என்பது புலனா கின்றது. மேலோட்டமாக நோக்கும்போது அவை அகப்பொருள் துறைகளைப் பயன்படுத்தி இருப்பினும், அத்துறை இறைக் காதலுக்காக மடைமாற்றம் செய்யப்பட்டது எனத்தெளியலாம்.

நந்திக்கலம்பகம் உடன்போக்கைப் புறத்தோடு பொருத்தி விளக்கும். கழல் நத்தியோடு வெள்ளாற்றில் நடந்த வெம்போரில் போர் செய்ய முடியாமல் அஞ்சி ஓடிய அரசர் கூட்டம் மறைந்து சென்ற பருக்கைக்கற்கள் சூழ்ந்த வழியில் இவர்கள் (தலைவன் தலைவி) ஏகிய நோக்கமென்ன? எனச் செவிலி புலம்புவதாகக்

காட்டும் இப்பாடல் வழி நந்திவர்மனின் வெற்றியும் எடுத்துரைக் கப்படுகின்றது.

தொல்காப்பியர் கூற்றுக்குரிய சூழலில் காட்டிய உடன் போக்கினைச் சங்க அக இலக்கியம் காட்டுகின்றது. அவ்வாறு உடன் போகும்போது தலைவி சிலம்பு கழிக்காமலும் கழித்தும் செல்வதை அக இலக்கியத்தின் வழி அறிகின்றோம். பக்தி இலக்கியத்தில் அத்துறை பயின்று வந்துள்ளது. எனினும் அகமரபினின்று திரிந்து நிற்கின்றது. காரணம் ஈண்டுத் தலைவி மட்டும் தலைவனிருப்பிடம் நாடிச் செல்கின்றாள், மேலும், இத்துறை கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்ததற்குச் சான்றாகும்.

## உடன்போக்கு

அஃதாவது, தலைவன் தன் ஊர்க்குத் தலைவியை உடன் கொண்டுபோதல்.

**'போக்கே கற்பொடு புணர்ந்த கௌவை
மீட்சியென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே.**

என்னும் சூத்திரத்தால், உடன்போக்கு மூவகைப்படும்.

**போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன்ன படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே.'**

என்னுஞ் சூத்திரவிதியால், உடன்போக்கு எட்டுவகைப்படும்.

### 299. பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல்

பாங்கி தலைவற்று உடன்போக்கு உணர்த்தல் என்பது, காப்புக் கைம்மிகலால் உன் ஊர்க்கு உடன்கொண்டு போதியெனப் பாங்கி தலைவற்கு உரைத்தல்.

(தொடரும்)

# ஹரிதாஸரின்
# இருசமய விளக்கம்

*இதழ் 164இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**1ஆவது விஷ்ணு பூசை வைபவப் பரிச்சேதம் தொடர்ச்சி.**

**பாடல் 32இன் பொருள்:** அதன்மேல் அனந்த கருட விஷ்வக் சேனரையும், சண்டன், பிரசண்டன், பலன், மகாபலன், குமுதன், குமுதாக்ஷன் என்ற வாயிற் காப்பாளர்களையும், துர்க்கை கணேசர்களையும், திக்குபாலர்களையும் அவரவர்களுக்குரிய இடங்களில் அர்ச்சிக்க வேண்டும்;

**33. சொலுமகா புருடவித்தை யாற்புருட**
**சூத்தமாமந்திரந் தன்னால்**
**அலகிலாவெனதுவிக்கி ரகத்தை**
**அடைவுகுன் றாமலர்ச் சித்துப்**
**பொலிவுறும் அங்கி தன்னும் அன்பாற்**
**பொருந்தவா வாகனம் பண்ணி**
**இலகிய சமிதநாச்சி யாகுதியும்**
**எனதுமந் திரத்தினால் செய்து;**

(பின்னர், கர்ப்பகிருஹத்திலிருக்கிற முக்கிய விக்கிர ஹத்தைப் புருஷ வித்தையாலும் புருஷசூக்த மகாமந்திரத்தாலும் விதிமுறை தவறாமல் அர்ச்சித்து, ஓமாக்கினியில் ஆவாஹநஞ்செய்து, நாராயண மந்திரமாகிய எனது மந்திரத்தால் ஆகுதியுஞ் செய்ய வேண்டும்.)

**34. சீரியஆ ராதனை முடிந்ததற்பின்**
**சிவந்தஆ லயத்தினைச் சூழ்ந்த**
**பாரிடங்கட் குப்பலிகளுங் கொடுத்துப்**
**பலவிதத் தெனைமகிழ் வித்து**
**நேரிலாஅந் தநிவேதிக மெல்லாம்**
**நிலைபெறும் சேனைகா வலனுக்(கு)**

**ஆரவேச மர்ப்பித்தங் கொருமுகத்தும்**
**ஆடலால் பாடலால் அமைத்து.**

(இவ்வாரதனை முடிந்த பின்னர் ஆலயத்தைச் சூழ்ந்திருக்கிற தேவதைகட்கும் பலிகொடுத்தும், இங்ஙனம் பலவகையாக என்னை மகிழ்விக்க வேண்டும். மேலும், எனக்கு நிவேதனமானவையெல்லாம் சேனாபதியான விஷ்வக்சேனருக்கு ஸமர்ப்பிக்க வேண்டும். பின் என்னை ஆடற்பாடலால் உகப்பிக்கவேண்டும்.

**35. திருந்துமென் னடிகளிரண்டையும் தனது**
**சிரத்திலுங் கண்ணிலுஞ் சேர்வித்(து)**
**இரும்பவக் கடலிலழுந் துமென்றனை**
**ஈடேற்று வாயெனப்பி ரார்த்தித்து**
**விரும்பிநா னளித்தமாலை யைச்சூடி**
**விதிமுறை எனைவழி படுவான்**
**அரும்பெறற் பரமபதத் லென்னுடனே**
**அகண்டவை பவமனு பவிக்கும்.**

(துயரறு சுடரடியாம் எனது திருவடிகளைச் சிரஸிலும் கண்களிலும் சேர்வித்துச் 'சொல்லமுடியாத துன்பத்தை அளிக்கும் பிறவிக்கடலில் அழுந்துகிற என்னை ஈடேற்றுவாய்' என்று பிரார்த்து விரும்பியான் அளித்த மாலையைச் சூடி விதிமுறையால் என்னை வழிபடுவான் எவனோ? அவன் பெறுதற்கரிய பரமபதத்தை அடைந்து அளவிலா ஆனந்தத்தை அநுபவிப்பான்.

**36. பத்தியாய் நீயும்யான் இனிதுரைத்த**
**படிபிலா ராதனை பண்ணி**
**நித்தியா னந்தபதத் தெனையடைவாய்**
**நிலைபெற வென்னவே யுரைத்தான்**
**இத்தைநீள் பாகவத புராணத்தே**
**காதசக் கந்தமென் பதனூ(டு)**
**அத்தியாந் தானிருப தோடேழாம்**
**அதனினிச் சயம்பெற அறையும்**



('உத்தவரே! நீ விரும்பக்திச் சிரத்தையுடன் யான் இங்குரைத்தவாறு என்னை திருவாரதநஞ் செய்து நிலை பெற்ற பதவியை அடைந்து ஆனந்தத்தை அநுபவிப்பீர்' என்று எம்பெருமான் உரைத்த விவரம் பாகவதம் பதினோரம் ஸ்கந்தம் இருத்தேழாம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.)

**37. மற்றிதுநிற் கவானவர் முனிவர்**
**மனிதரோ டேனைய ரெல்லாம்**
**முற்றும்வேள் விகளேமு தலவாங்கன்**
**மமுழுதினும் செய்திடு வதெலாம்**
**வெற்றிநாரா யணனாரா தனைதானே**
**விசேடவர் ராதனை இன்னும்**
**முற்றுறைசெய் யிற்பஞ்ச ராத்ரநூல்**
**ஒன்றரைக் கோடிநீள் கிரந்தம்.**

(மற்றது நிற்க, தேவர் முனிவர் மனிதர்களனைவரும் வேள்வி முதலியவைகளிற் செய்யும் ஆராதனமெல்லாம் ஸ்ரீமந்நாராயணனைச் சார்ந்தனவாம். இச்சிறந்த ஆராதனை விதிகளை ஒன்றரைக்கோடி கிரந்தத்தினையுடைய பாஞ்ச ராத்திரமும்;)

**38. வளம்பெறும் வைகாந சமெனும்நூற்**
**குவரம்பி லையாகை யினாலே**
**விளங்கவேய தெலாமுரைத் திடிலிங்கு**
**மிகவிரிந் திடுமிது நிற்கத்**
**தெளிந்திடு நாலுவகைப் புருடார்த்த**
**சித்தியும் திரம்பெறத் தருவான்**
**களங்கமில் முகுந்தனே எனுந்திறமும்**
**கருத்துடன் கட்டுரை செயக்கேள்.**

(வளத்தையளிக்கும் அளவற்ற வைகாநச ஆகமமும் விரித்துரைத்தன. அம்முறைகளை உரைக்கப்புகில் மிகவும் விரியும். இஃதொருபுறமிருக்க, இனித் தெளிவைத்தரும் நான்குவகையில் புருஷார்த்த சித்திகளையும் உகந்தளிப்பவனும் ஸ்ரீமந்நாராயணன் என்பதை ஆகமமடந்தாய்! விரித்துரைப்பேன் கருத்துடன் கேட்பாயாக:)

2õ¶, ê¶MîŠ¹¼ì£˜^îŠ ðK„«êî‹.

1. **ஏராரும் முத்தியருள் மூர்த்திவேத**
**இறுதிக்கண் எங்கு மொழியும்**
**காராரும் மேனியரி யேயெனுஞ்சொல்**
**கடவல்லியும்ப கருமால்**
**நாராயணச்சுருதி யுத்தரங்கள்**
**நழுவாத பேறு பெறுமா(று)**
**ஆராத னைக்குமுயல் கின்றதெய்வம்**
**அவனே யெனுஞ் சொலறையும்.**

(எல்லா வேதங்களும் அழகிற் சிறந்த முக்திப் பேற்றைருளுமவன் செங்கண்மாலே என்று உரைக்கின்றன வென்று கடவல்லி கூறாநின்றது. நாராயண உபநிஷத்தின் உத்திரபாகமும், அழியாப் பேற்றைப் பெறுவதற்கு ஆராதனை செய்தற்குரியவன் திருமாலே என்று உரையாநின்றது.)

2. **ஒலிமேவும் சீர்புருட சூத்தமந்த**
**ஒளிர்மால் தியான மாதலால்**
**நிலையான முக்திபெறு கைக்குவேறு**
**நெறியில்லை யென்னு மிதலால்**
**பலவேத சாகைகளும் முக்திநல்கு**
**பரமன் முகுந்த னெனவும்**
**சொலவே விளம்பும தெலாநினைந்து**
**தொகைசெய்ய என்னில் எளிதோ.**

(இசைபொருந்திய அழகிய புருஷசூக்தமானது தேஜோரூபியான திருமாலின் தியானமாதலால், அவனைத்தவிர வேறு வழியில்லை என்று புருஷசூக்தம் மொழிந்தது. இன்னும் பலவேத சாகைகளும் முக்தியை அருளுபவன் முகுந்தனே என்று விளம்புகின்றன. இங்ஙன முறைக்கின்றவை எல்லாம் எண்ணிச் சொல்லுவதற்கு எளியனவாமோ?)

(தொடரும்)



# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 164இன்தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

*தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம ஸதா$_3$ பச்யந்தி ஸூரய: |*
*தி$_3$வீவ சக்ஷு ராததம் ||*

**இதன் பொருள்:** விஷ்ணுவின் அந்தப் பரமபதத்தை பரந்து விரிந்த ஒளி உலகத்தைப் பார்ப்பதுபோல் நித்ய முக்தர்கள் பார்க்கிறார்கள்.

பகவான் விஷ்ணுவின் இருப்பிடமான பரமபதத்தை விவரிக்கிறது இம்மந்திரம். 'பரம' என்ற சொல்லுக்கு ஏற்கனவே விளக்கம் கூறியுள்ளோம். தனக்கு மேல் எதுவும் இல்லாதது தான் 'பரம' என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. விஷ்ணுவின் ஸ்தானமே மிகவுயர்ந்த ஸ்தாநம் என்பதும், அதற்கு மேல் எதுவும் இல்லை என்பதும் இம்மந்திரம் மூலம் தெளிவாகின்றது. பேரொளி உமிழும் பரந்து விரிந்த ஒளி உலகம் போல் அப்பரமபதம் விளங்குவதாகச் சொல்லப்படுகிறது. அதாவது எல்லைகாண முடியாத பரப்பை உடையதும், விவரிக்க முடியாத அளவிற்கு ஒளி உள்ளதுமான ஒரு உலகம் போல் அப்பரமபதம் விளங்குகிறதாம். இங்கு 'தி$_3$வி' என்ற சொல்லுக்கு வானம் என்று பொருள் உண்டுதான். ஆனால் இந்த மந்திரத்தைப் பொறுத்தவரை ''வானம்'' என்று பொருள் கொள்ள முடியாது. ஸர்வேஸ்வரனான பகவான் விஷ்ணுவின் ஸ்தாநத்திற்கு சாதாரணமான வானத்தை எப்படி உவமையாக்க முடியும்? வானம் அவனால் படைக்கப்பட்டதன்றோ? படைத்தவனின் உலகை விளக்க படைக்கப்பட்ட ஒன்றை உவமையாக்குவது பொருத்தமாக இருக்குமா? பொருத்தமாக இருக்காது. அது முறையும் அன்று. ஆகவே வெறும் காரணப் பெயர்ச் சொல்லாகவே 'தி$_3$வி' என்ற சொல்லைக் எடுத்துக்கொண்டு 'ஒளி உலகம்' என்று பொருள் கொள்ள வேண்டும். 'பரந்து விரிந்த' என்று (ஆததம்) சொல்லப்படுவதால் கணக்கற்ற ஒளியைக் கொட்டும் ஒரு அபூர்வ உலகம் என்று கொள்ளவேண்டும். ''வானத்தில் இருக்கும் சூரியனைப்

பார்ப்பதுபோல்'' என்று பொருள் கொள்வதும் உண்டு. ஆனால் இப்பொருளும் அத்துணை பொருத்தமாகாது. ஏனெனில், பகவான் விஷ்ணுவின் ஸ்தானமான பரமபதத்தின் ஒளியோடு ஒப்பிடும் போது சூரியனின் ஒளி ஒரு மின்மினிப் பூச்சியின் ஒளிதான். சூரியனின் ஒளியே பகவானின் ஒளியின் ஒரு சிறுபகுதிதானே. சூரியனுக்கே ஒளி பகவானிடமிருந்து வந்தது என்று சொல்லப் படுகிறபொழுது அவனுடைய ஒளியை பகவானின் உலகோடு ஒப்பிடுவது பொருத்தமாக இருக்காது.

ஆகவே ''கணக்கற்ற ஒளியை உமிழும் ஒரு ப்ரஹ்மாண்ட உலகத்தைக் காண்பது போல எப்போதும் தங்களின் கண்களால் நித்யமுக்தர்கள் பரமபதத்தை காண்கிறார்கள் ''என்பதே இம்மந்திரத்திற்கு பொருத்தமான பொருள். அதனால் பகவான் விஷ்ணுவின் உயர்ந்த அந்த ஸ்தாநம் பேரொளி கொண்ட ஒளி உலகம் என்பதை இம்மந்திரம் மூலம் அறிகிறோம். மேலும் நித்ய முக்தர்கள், அதாவது நித்ய ஸூரிகள் அப்பரமபதத்தை எப்போதும் பார்க்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நித்ய ஸூரிகள் என்பவர்கள் பரமபதத்தில் எப்போதும் இருப்பவர்கள். அதனாலேயே அவர்கள் எப்போதும் பார்க்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நித்ய ஸூரிகள் போன்ற மோக்ஷமடைந்த ஆத்மாக்களே பரமபதத்தில் பேரொளியைக் காணும் சக்தி பெற்றவர்கள். அவர்களின் கண்களுக்கு அவ்வொளி தங்கு தடையின்றி பார்க்கக் கூடியதாக இருக்கும். சாதாரண மனிதர்களோ தேவர்களோ அங்கு செல்லவும் முடியாது. அப்பரம பதத்தின் ஒளியைக்காண அவர்களின் கண்களுக்கு சக்தியும் இல்லை. அதனால்தான் நித்யஸூரிகளே எப்போதும் காண்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நித்யஸூரிகள் எப்போதும் காண்கிறார்கள் என்று சொல்வதால், ''அப்பரமபதத்தின் எழிலை நாமும் காண வேண்டும். நமக்கு அந்தக் கொடுப்பினை உண்டோ?'' என்ற ஒரு ஏக்கம் கலந்த ஆவலும் இம்மந்திரத்தில் வெளிப்படுகிறது. வேதம் எப்பொழுதுமே சில உள்அர்த்தங்களை மறைத்துக்கொண்டு தான் பேசும். ஆழ்ந்து சிந்தித்தே அதைப் புரிந்து கொள்ள வேண்டும். இம்மந்திரம் யஜுர்வேதம் 1ஆம் காண்டம் - 3-ஆம் ப்ரச்நம் 6-11இல் காணப்படுகிறது. இனி 21-ஆம் மந்திரத்தைப் பார்ப்போம்.



***தத்$_3$விப்ராஸோ விபந்யவோ ஜாக்$_3$ருவாம்ஸ: ஸமிந்த$_4$தே |***
***விஷ்ணோர் யத் பரமம் பதம் ||***

**இதன் பொருள்:** ''விஷ்ணுவின் அந்தப் பரமபதத்தைச் சிறந்த ஞானிகளும், சிறப்பாகத் துதிப்பவர்களும், எச்சரிக்கையுள்ளவர் களுமான முக்தர்கள் ஒளிபெறச் செய்கிறார்கள்.''

முக்தியடைந்து பரமபதம் சென்றவர்களின் பெருமை இம்மந்திரத்தில் பேசப்படுகிறது. முக்தர்கள் விஷ்ணுவின் பரமபதத்தை ஒளிபெறச்செய்கிறார்கள் என்று சொல்லப்படுவதால், பரமபதத்திற்கு ஒளியே முக்தர்களால்தான் ஏற்படுகிறது என்று தவறாகப் பொருள் கொண்டுவிடக்கூடாது. ஒரு ஆத்மா பிறவிக்குக் காரணமான பாவபுண்யங்களும், ஜன்மாந்தரத்தில் செய்த கர்மவினைகளும் தொலைந்து மோக்ஷமடைவதற்குரிய தகுதியை அடைந்து விட்டால் அந்த ஆத்மாவுக்கு தூய ஒளி உருவம் கிடைத்துவிடுகிறது. மிகவும் பிரகாசமான தோற்றம் அந்த முக்தாத்மாவுக்குக் ஏற்பட்டுவிடுகின்றது. தேவர்களுக்கெல்லாம் எப்படி பகவான் விஷ்ணு ஒளி வழங்கியிருக்கிறாரோ அதைப்போல முக்தாத்மாக்களுக்கும் அவனே ஒளியைக் கொடுக்கிறான். முக்தாத்மாக்களின் ஒளி தேவர்களின் ஒளியை விடப் பிரகாசம் அதிகம் கொண்டதாகும். ஆகவே மிகுந்த ஒளியுருக்கொண்ட முக்தாத்மாக்கள் பரமபதம் சென்றவுடன் பரமபதத்தின் ஒளியோடு அவர்களின் ஒளியும் கலந்து பிரகாசிக்கின்றது.

அவர்கள் ஒளியுருவில் அங்கு செல்வதாலேயே பரமபதத்தை ஒளிவிடச் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இது ஒரு வகையில் முக்தாத்மாக்களைப் பெருமைப்படுத்துவது தான். அவர்களின் ஒளியும் பகவானால் கொடுக்கப்பட்ட ஒளிதான் என்பதால், மந்திரத்தின் பொருளில் குழப்பம் ஏதும் இல்லை. மேலும் பரமபதம் சென்ற முக்தாத்மாக்கள் தங்களது பூரண ஞானத்தால் பகவானைக் கண்டு, அவனை விதிப்படி துதிக்கி றார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பகவத் ஆஜ்ஞைக்கு கட்டுப்பட்டு ஒவ்வொரு நொடியும் அவர்கள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஒரு தலைவனுக்குக் கீழ் உள்ள தொண்டனின் விச்வாச உணர்வே இங்கு எச்சரிக்கை (ஜாக்ருவாம்ஸி:) என்ற பதத்தால் குறிப்பிடப்படுகின்றது. அதாவது

பக்தர்கள் பகவானுக்கு அடிமை என்றபடி. ஆகவே இம்மந்திரத்தால் முக்தாத்மாக்களின் பெருமை பேசப்பட்டது.

அடுத்து ரிக்வேதம் - முதல் மண்டலம் -154ஆவது ஸூக்தம் விஷ்ணுவைப் பற்றியது: இந்த ஸூக்தத்தில் 6 மந்திரங்கள் உள்ளன. அவற்றின் விளக்கத்தை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். மேற்படி ஸூக்தத்தின் முதல் மந்திரம் பின்வருமாறு:

**விஷ்ணோர்நுகம் வீர்யாணி ப்ரவோசம் ய:**
**பார்தி$_2$வாநி விமமே ரஜாம்ஸி ।**
**யோ அஸ்கப$_4$ாய து$_3$த்தரம் ஸத$_4$ஸ்தம்**
**விசக்ரமாணஸ்த்ரேதே$_4$ாரு க$_3$ாய: ॥**

**இதன் பொருள்:** "நான் விஷ்ணுவின் வீர தீரச் செயல்பாடுகளை விரைந்து கூறுகிறேன். அவன் பூமி முதலிய மூன்று உலகங்களையும் தனது மூன்று அடிகளால் அளந்தான். மேல் உலகையும் தாங்கும் அவன் பெரியோர்களால் துதிக்கப் பட்டான்".

இந்த மந்திரத்தில் விஷ்ணு தன் திருவடிகளால் உலகளந்த வரலாறு கூறப்படுகிறது. உலகங்களை அளப்பது தாங்குவது போன்ற அவனது செயல்பாடுகள் அவனே ஸர்வேச்வரன் என்பதை நமக்குக் காட்டித் தருகின்றன. "விமமே" என்ற சொல்லுக்கு நிர்மாணம் செய்தான் என்ற பொருளும் உண்டு. அதாவது உலகங்களை அவனே படைத்தான் என்று கூறுவதும் பொருத்தமானதே. அகில உலகும் எவனது காலடியின் தூசியோ அவனே அதை உருவாக்கியவன். அவனது வீர்யச் செயல்களை உள்ளபடி கண்ட ஞானிகள் அவனைப் பெரிதாகத் துதிக்கிறார்கள். பெரியோர்கள் (உருக$_3$ாய) என்று இங்கே குறிப்பது ஞானிகளை உண்மையை உணர்ந்த அதாவது அவனது பெருமைகளை உள்ளபடி உணர்ந்த ஞானிகளே முறைப்படி அவனைத் துதிக்கிறார்கள்.

யாரை வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் துதி செய்வதை நாம் நடைமுறையில் பார்க்கிறோம். துதிக்கப்படத்தகாதவர்களை, துதிக்கத் தகாதவர்கள், பொருத்தமற்ற வார்த்தைகளைக் கொண்டு



துதிப்பதெல்லாம் வெறும் அபிமானத்தால் தானே தவிர, அத்துதிகளில் அர்த்தமும் இருக்காது. வேதத்தில் விஷ்ணுவுக்கு மட்டுமே பரமாத்மாவுக்குரிய லட்சணங்கள் அமைந்திருப்பதாக துதிகள் வருகின்றன. மற்ற எந்த தேவதைக்கும் அப்படிப்பட்ட துதிகளைக் வேதத்தில் காணமுடியாது. ஏனெனில் விஷ்ணுவின் உயர்வையும் மற்ற தேவதைகளின் தாழ்வுகளையும் நன்கு அறிந்தவர்கள் ரிஷிகள். உண்மையில் மற்ற தேவதைகளின் சக்திகள் எல்லாம் விஷ்ணுவின் சக்திகள்தான் என்பதை நாம் முன்பே பார்த்திருக்கிறோம். இந்த மந்திரத்தில் விஷ்ணுவின் அரிய பெரிய மஹத்வங்களை உணர்ந்த மஹான்களான ஞானிகள் பெரிய விதமாக அவனைத் துதிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

மற்ற தேவர்கள் அனைவரும் விஷ்ணுவுக்கு அடங்கி யவர்கள் என்பதாலும், விஷ்ணுவின் சக்தியே அவர்களை இயங்கவைக்கிறது என்பதாலும்தான், விஷ்ணுவின் அளவற்ற பெருமையை உணர்ந்த ஞானிகள் சிறப்பான முறையில் பெரிய அளவில் அவனைத்துதிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஸகல லோகங்களையும் தன் திருவடியால் அளந்துவிட்டபடியால் எல்லாலோகங்களிலும் உள்ள தேவர்களும் மற்றவர்களும் அவனது திருவடியின் துகளாகிவிடுகின்றனர். ஆகையால் அவனைக் குறித்துக் கூறப்படும் துதிகளே முக்யத்துவம் வாய்ந்தவை ஆகின்றன. ஒப்பற்ற ஆற்றலும் பெருமையும் உடைய அப்பரமனான விஷ்ணுவைத் துதிப்பவர்களே மஹத்வம் உடைய மஹான்கள். அதனால்தான் பெரியோர்களால் பெரியவிதமாகத் துதிக்கப்பட்டான் என்று சொல்லப்படுகிறது. அதாவது வேதங்களைக் கண்ட ரிஷிகளே மஹான்கள் எனப்படுகின்றனர். அவர்கள் விஷ்ணுவின் பரமாத்ம ஸ்வரூபத்தையும், மற்ற தேவர்களின் தாழ்வுகளையும் நன்கு அறிந்துவைத்திருப்பவர்கள் என்பதால் அவர்கள் மஹான்கள் என்று சொல்லப்படுகின்றனர்.

இம்மந்திரத்தில் இடம் பெற்றுள்ள 'ஸத$_4$ஸ்தம்' 'உத்தரம்' 'உருக$_3$ாய' என்ற சொற்கள் மிகவும் முக்யத்துவம் வாய்ந்தவை. 'ஸத$_4$ஸ்தம்' என்பது முக்தியடைந்த புண்ணிய ஆத்மாக்கள் நிரம்பிய இடம் என்ற பொருளில் வந்துள்ளது. பரமபதத்தில் ஸதாஸர்வகாலமும் முக்தாத்மாக்கள் பகவானை

ஸேவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். ‘உத்தரம்’ என்பது மிகவுயர்ந்த இடம் என்ற பொருளில் வந்துள்ளது. அதாவது அதைவிட உயர்ந்தது எதுவும் இல்லை என்றபடி. திரும்பி வருதல் இல்லாத, அப்ராக்ருதமான, மிகவுயர்ந்தபதமான விஷ்ணுவின் பரமபதமே ஆத்மாக்களின் கடைசி இலக்கு என்று சொல்லப்படுகின்றது.

அவ்வுலகையும் பகவான் விஷ்ணு தன் சக்தியினாலே தாங்குகிறான் என்று இங்கு சொல்லப்படுகிறது. ‘உருக$_3$ாய’ என்ற சொல் பெரியவிதமாகப் புகழப்படுபவன் பெரியவர்களால் புகழப்படுபவன் என்ற பொருள்களில் வந்துள்ளது. இச்சொல் மற்ற எந்த தேவர்களின் விஷயத்திலும் பயன்படுத்தப்படவில்லை என்று குறிப்பிடத்தக்கது. எல்லோருக்கும் பெரியவனை (அவனுக்கு மேல் பெரியவன் யாரும் இல்லை) ஞானத்தால் சிறந்த பெரியவர்கள் (அவர்கள் தேவர்களாகவோ, ரிஷிகளாகவோ, மனிதர்களாகவோ கூட இருக்கலாம்) பெரிய விதமாக (அவனது பெருமையை முழுவதும் புகழத் தகுதியான உயர்ந்த பொருத்தமான வார்த்தைகள் இல்லாத அளவிற்கு அவனது பெருமை பெரிதாகையால்) இயன்ற அளவில் துதிக்கிறார்கள் என்ற அர்த்தத்தில் ‘உருக$_3$ாய’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இம்மந்திரத்தின் மூலம் ஸகல லோகங்களையும் படைத்துக் காக்கும் பரமன் விஷ்ணுவே என்பதை அறியமுடிகிறது. இம்மந்திரம் யஜுர்வேத தைத்ரீய ஸம்ஹிதை 1-ஆம் காண்டத்தில் 2-ஆவது ப்ரச்னத்தில் 13-ஆம் பிரிவிலும் வருகிறது. இந்த ஸூக்தத்தின் 2-ஆவது மந்திரம் பின்வருமாறு.

**ப்ர தத்$_3$விஷ்ணு: ஸ்தவதே வீர்யேண**
**ம்ருகே$_3$ாந பீ$_4$ம: குசரோ கி$_3$ரிஷ்ட$_2$ா: |**
**யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷ்**
**வதி$_4$க்ஷியந்தி பு$_4$வநாநி விஶ்வா ||**

**இதன் பொருள்:** “விஷ்ணுவின் மூன்று திருவடி வைப்புக் களிலேயே எல்லா உலகும் அடங்கிக் கிடக்கின்றன. மஹத்தான வீர்யச் செயல்களுக்காகத் துதிக்கப்படும் அவன் மலையில் பயங்கரமாகச் சுற்றித்திரியும் சிங்கத்தைப்போல் இருக்கிறான்.”



மறுபடியும் பகவான் விஷ்ணுவின் உலகளந்த பெருமையைப் பேசி மகிழ்கிறது இம்மந்திரம். தன் திருவடிக்குள்ளே எல்லா உலகங்களையும் அடக்கிய விஷ்ணுவே பரமேஶ்வரன் என்பதை இம்மந்திரம் தெளிவாக்குகிறது. பெரிய மஹத்வம் வாய்ந்த வீரியம் மிக்க செயலைச் செய்யக் கூடியவன் அந்த விஷ்ணுவே. அதனாலேயே அவன் துதிக்கப்படுகிறான். அதனால் அவன் பயங்கரமான சிங்கத்தோடு ஒப்பிடப்படுகிறான்.

அவனே தர்மத்தைத் தரித்துக் காப்பவன் என்ற விஷயத்தை ஏற்கனவே நாம் பார்த்துள்ளோம். அந்தவகையில் வேத வைதிக தர்ம விரோதிகளுக்கு அவன் பயங்கரமானவன் என்பதை உணர்த்தவே அவன் பயங்கர மிருகத்தோடு ஒப்பிடப்படுகிறான். இம்மந்திரம் தைத்ரீய ப்ராஹ்மணம் 2-ஆம் அஷ்டகம் 4-ஆம் பிரச்னத்தில் 3-ஆம் பிரிவிலும் வருகிறது.

இனி 3-ஆம் மந்திரத்தைப் பார்ப்போம்.

**ப்ரவிஷ்ணவே ஸூஷமேது மந்ம**
**கி$_3$ரிக்ஷித உருக$_3$ாயாய வ்ருஷ்ணே |**
**ய இத$_2$ம் தீ$_3$ர்க$_4$ம் ப்ரயதம் ஸத$_4$ஸ்தமேகோ**
**விமமே த்ரிபி$_4$ரித்பதே$_3$பி$_4$: ||**

**இதன் பொருள்:** “எந்த விஷ்ணு ஒருவனாகவே தன் மூவடிகளால் பரந்து நீண்ட உலகனைத்தையும் அளந் தருளினானே. நன்மைகளை வழங்குபவனும், மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவனும் சிறந்த துதிகளால் துதிக்கப் படுபவனுமான அந்த விஷ்ணுவுக்கு எனது துதிகளும் அதனால் ஏற்படும் பலமும் போய்ச் சேரட்டும்”.

மந்த்ரத்ரஷ்டாவான ரிஷி பகவான் விஷ்ணுவை, பக்தி மேலிட்டகாரணத்தால் மங்களாசாஸனம் செய்கிறார். இம்மந்திரத்தில், மிகவுயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவனான அப்பரமனுக்கு தனது துதிகளால் பலமேற்படட்டும் என்கிறார் ரிஷி. விஷ்ணுவைப் பரமனாக அறிந்தும், சராசரி மனித இயல்புடன் இருப்பதால் தனது துதிகள் அவனுக்கு உற்சாகம் ஏற்படுத்தும் என்று நினைத்தே அவ்வாறு கூறுகிறார் ரிஷி. ஸர்வ

வல்லமைமிக்க பரமனுக்கு யாருடைய உற்சாக வார்த்தைகளும் தேவையில்லை. உயர்ந்த பக்தியும் அன்பும் உடையவர்கள் சில நேரத்தில் மனித இயல்பால் தாரதம்யத்தை உணராமல் பேசிவிடுவது இயல்பன்றோ? அந்த அடிப்படையில்தான் ரிஷி அவ்வாறு பேசுகிறார். மேலும் விஷ்ணுவிடம் பக்தி கொண்டவர்கள் மங்களா ஈஸநபரர்களாகவே இருப்பர் என்பதும் இம்மந்திரத்தின் மூலம் தெளிவுபடுத்தப்படும் விஷயமாகும்.

**இனி நான்காவது மந்திரத்தின் பொருளைப் பார்ப்போம்.**

**யஸ்ய த்ரீபூர்ண மது$_4$நா**
**பத$_3$ாந்யக்ஷீயமாணா ஸ்வத$_4$யா மத$_3$ந்தி ।**
**ய உ த்ரித$_4$து ப்ருதி$_2$வீமுத**
**த்$_3$யாமேகோ த$_3$ாத$_4$ார பு$_4$வநாநி விஶ்வா ॥**

**இதன்பொருள்:** “எந்த விஷ்ணு தனியொருவனாகவே பூமியையும் ஆகாயத்தையும் எல்லா உலகையும் மூன்று தாதுக்களையும் தன்மூன்று அடிகளால் ஏந்துகிறானோ அந்த விஷ்ணுவின் அழிவற்ற திருவடிகள் தேன்கலந்த அமிர்தம் நிறைந்தவை. அத்திருவடிகளே எல்லோரையும் அன்னத்தால் சந்தோஷிக்கச் செய்கின்றான்.”

பகவானின் திருவடிச் சிறப்பை உத்கோஷிக்கிறது இம்மந்திரம். பகவான் விஷ்ணுவின் திருவடிகளில் அமிர்தம் நிறைந்துள்ளது என்றும் அதுவே உலக உயிர்களுக்கு சந்தோஷத்தை அளிக்கிறது என்றும் கூறப்படுகிறது. அழிவற்ற (அக்ஷீயமாணா) திருவடிகள் என்று கூறப்படுவதால் பகவான் அழிவற்றவன்; தொடக்கமும் முடிவும் இல்லாதவன்; என்றும் ஸநாதநனாக இருப்பவன் என்பது இம்மந்திரத்தின் மூலம் தெளிவாகிறது. “ஸ்வத$_4$யா மத$_3$ந்தி” என்று சொல்வதால் தேவர் மநுஷ்யர் முதலான எல்லா ஜீவ சமூகங்களுக்கும் உணவளித்து வாழவைப்பதே பகவானின் திருவடி என்பது இங்கு புலனாகிற விஷயம். என்றும் அழியாத தேன்கலந்த அமிர்தத்தை கொண்டுள்ளதால்தான் அவனது திருவடிகள் முக்தாத்மாக்கள் நாடிச் செல்லும் இடமாக இருக்கிறது. (தொடரும்)



# மாறன் பாப்பாவினம்

இதழ் 164இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

**(மணிமல்கு திரைத்திருபாற்கடல் என்று தொடங்கும் பாடலின் தொடர்ச்சி.)**

**துறவற முதலிய துரிசற வருளினன்**
**அறமலி புதல்வனை அருளியது அறிகிலர்**

**திவமுறு சிறுவர்கள் இருவரோடு இருவரை**
**அவன்வயின் அடைவினில் அருளியது அறிகிலர்**
**(இவையிரண்டும் அராகம்)**

**தாதையாதலும்**
**புதல்வன்ஆதலும்**
**பேதைஆதலும்**
**அறிவனாதலும்**
**பெரியனாதலும்**
**சிறியனாதலும்**
**கரியனாதலும்**
**செய்யனாதலும்**
**(இவை எட்டும் சிற்றெண்)**

**உணர்கிலர்**
**(இது தனிச்சொல்)**

**கன்றொடு சிறுவர் கடைகயிறு அணிகுணில்**
**கொன்றையந் தீங்குழல் கொடுமலர் அயன்எழும்**
**அவ்வுழி அவைஅவை அவர்அவர் தெருளுற**
**எவ்வுரு வமும்ஆம் நினதுரு வழியாது**
**இருப்பவும் வியாத்திஎய் தியதுஉணர்ந் திலரால்**
**அற்புத மாயை அலகிலாக் கருணைய**
**சிற்குண நினைத்தெருட் டினரே.**
**எற்குஇறை எனமனன் மதித்ததுஇப் போதே. 104**

(இது எட்டடித்தாய் நேரிசையாசிரியத்தான் இற்ற சுரிதகம்)

(இது அம்போதரங்க ஒரு போகு. என்னை?

“அம்போ தரங்கம் அறுபதிற் றடித்தே
செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை”

(தொல்.செய். 152)

என்பதனாலும்

“எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்
அடக்கியல் வாரமொடு அந்நிலைக் குரித்தே”

(தொல். செய். 153)

என்பதனானும் உணர்க.

இங்ஙனம் கூறப்பட்ட அம்போதரங்க ஒரு போகுதன் னுறுப்பெல்லாம் கூட்டி அறுபதிற்று அடித்தாகவும் அதன் செம்பால் முப்பதடித்தாகவும் அதன் வாரம் பதினைந்து அடித்தாகவும் சிற்றெல்லை பெறும் என்றவாறு. எனவே இது தலையளவம்போதரங்க ஒருபோகும் இடையளவம் போதரங்க ஒருபோகும் கடையள வம்போதரங்க ஒரு போகும் சிற்றெல்லை கூறியவாறு ஆயிற்று. அவற்றுக்குப் பேரெல்லை கூறுமாறென்னை யெனின், அறுபதிற்று அடித்தெனத் தலையளவிற்கு வேறு கூறியவழி அவ்வளவைப்பற்றி அதன் செம்பாலும் வாரமும் எனப் பாகம் செய்து வந்தான். ஆதலால் கடையளவிற்குச் சிற்றெல்லை பதினைந்தாயவழிப் பேரெல்லை முப்பதின்காறும் உயரும் எனவும், இடையளவிற்குச் சிற்றெல்லை முப்பதாகிய வழிப் பேரெல்லை யறுபதின்காறும் உயரும் எனவும் தலையளவிற்குச் சிற்றெல்லை அறுபதாயவழிப் பேரெல்லை இரட்டி நூற்றிரு பதின்காறும் உயறும் எனவும் கொள்ள வைத்தான் என்பதாம்.

ஆதலால் இது நாற்பத்து நாலடியால் வந்தமையால் (இடை எல்லை) இடையளவம் போதரங்க ஒரு போகு ஒழிந்தவும் இவ்வாறே வரும், இவையெல்லாம் இக்காலத்து வீழ்ந்தன போலும்.



திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து.

மணி - முத்துக்கள். நடுவண் - நடுவில். அரவு - ஆதிசேடன். அமளி - படுக்கை. கொள்வுழி - கொண்டிருந்த போது. மதமா - யானை. அழுங்கு அஞர் - மிக்க துன்பம். முகுளம் - தாமரை மொட்டு. நெகிழ்ந்து - விலக்கி. கழல் - திருவடி. உறைப்ப - பதிய. பொலந்துகில் - பொன்னாடை. சுற்றவிழ - அவிழ்ந்து விழ. குஞ்சி - கூந்தல். சுவல் - பிடரி. கலுழன் - கருடவாகனம். கொடு - கையிற் பிடித்துக் கொண்டு. தாய்த்தாய் - தாவித்தாவி. இடங்கர் - முதலை. முரண்முருக்கி - பகை ஒழித்து. கதிர் - ஒளி. மெய்ஞ்ஞானம் தரிப்ப - மெய்யறிவால் அறியும்போது. தெருளாது - தெளியாமல். இறப்பை - இறப்பாய். தோன்றுவை - பிறப்பாய்.

கற்பன - நூலறிவு. சால் - மிக்க. கற்படிவம் கைக்கொண்டாள் - அகலிகை. சற்படிவம் - நல்லுருவம். பொற் புருவம் - அழகிய வடிவம். உறார் - நினைக்கமாட்டார். போன்ம் - அசைச்சொல்.

முருந்தை நகையாள் - அபிமன்னன் மனைவி உத்தரை. இருந்தை - கரிக்கட்டை. இளவரசு - பரிட்சித்து.

தணந்தவள் - பிரிந்தவள். மூடம் - மடலம்.
கமலமலர் - பிரமன்.
திவம் - பரமபதம். இருவரோடு இருவர் - நால்வர்.

கொடு - கொண்டு. மலர் அயன் - பிரமன். தெருளுற - தெளிய. குணில் - குறுந்தடி. வியர்த்தி - வியாபித்தல்; எல்லாமாகப் பரவுதல். சிற்குணன் - தூய குணமுடையவன். தெருட்டினர் - தெளிந்தவர். எற்கு - எனக்கு. மனன் - மனம்.

பாற்கடலில் பாம்பனையில் பள்ளி கொண்டபோது ஓர் யானை அழைத்தலால் திருமகள் சலவியையும் கைவிட்டு கால் தரையில் அழுந்தவும் உடை சுற்றவிழவும் கூந்தல் முடியாமல் பிடரில் புரளவும் வாகனமாகிய கருடன்மேல் ஏறாமல் அவனைக் கையில் பிடித்துக் கொண்டு தாவிச் சென்று முதலையாகிய பகையை ஒழித்துத் தென்னரங்கத்தில் அமர்ந்தவனே!

நீ கதிர்ஒளி எங்கும் பரவியிருப்பதுபோன்று அணுக்கள் தொறும் வீற்றிருப்பதைச் சான்றோர்கள் தம் மெய்யறிவால் உணர்கின்றனர். ஆனால் சிலர் உலகமெலாம் படைத்த நின்மாயையைத் தெளிந்து கொள்ளாமல் உனக்குப் பிறப்பு இறப்பு உண்டு என்கின்றனரே? இது என்ன வியப்பு!

கௌதமன் மனைவியின் கல்லுருவம் நீங்க நின்கால் தூசியினால் அழகிய வடிவம் தந்ததை நினையாதவர்களாய் உள்ளனரே!

உத்தரை மனமகிழ அவள் கருப்பமாகிய கரிக்கட்டையை இளவரசனாக்கியருளியதையும் அறியாமலுள்ளனரே!

காப்புத் தொழிலே அன்றி உன் உந்திக் கமலமானது உலகங்கள் அனைத்தையும் படைத்ததை அறியாமல் உள்ளனரே!

பரமபதம் அடைந்துவிட்ட வேதியன் புதல்வர் நால்வரை மீண்டும் கொணர்ந்து அவனிடம் கொடுத்ததை அறியாதவனாய் உள்ளனரே!

தாதை - புதல்வள். பேதை - அறிவன். பெரியன் - சிறியன். கரியன் - செய்யன் இப்படி எதிர்மறைப் பொருள்களாகவும் நீயே இருப்பதை உணராதவராய் உள்ளனரே!

பிரமன் பசுக்கள், கன்றுகளுடன் ஆயர் சிறுவரை யெல்லாம் தன்னுலகில் மறைத்து வைத்தபோது, பசுக்கள், கன்றுகள், சிறுவர்கள் மட்டுமா! அவர்கள் வைத்திருந்த கடைகயிறு, குறுந்தடி, வேய்ங்குழல் முதலிய எல்லாமாகி ஆயர்கள் ஐயமுறாதபடியிருந்தும் நின் ஆதியஞ்சோதி யுரு அழியாது இருந்தனையே! இவ்வாறு எங்கும் பரவி எல்லாமாகி இருப்பது நீயே என்று உணராதவராய் உள்ளனரே!

உன்னையே இறைவன் என்று தெளிந்தவரே எமக்கு இறைவராவார் என்று என்மனம் இப்போது உறுதி கொள்கின்றது.

என்பது பாடலின் சாரம். (தொடரும்)

# நெல்லி நகர் அருளாளதாசரின் பாகவதம்

இதழ் 164இன் தொடர்ச்சி. ஆசிரியர். திரு. மு. அருணாசலம்.

**வானதி பிறை வெண் கூவிளை கடுக்கை**
**சாந்தையோ டெருக்கலர் மத்தம்**
**பூநிறை சடைகள் அசைந்திட நுதலின்**
**அழல்விழி பொருந்திடப் பஞ்ச**
**ஆனனந் திகழ உழைமழுக் கபாலம்**
**அழல் கரத் துறமலை யரையன்**
**மானிடத் திலகக் கொடி குடை வயங்க**
**அரனுயர் விடையின்மேல் வந்தான்.**

**உரக கங்கணம் கையில் இலங்கிடச் சூலம்**
**ஒளிவிட உமாபதி விடைமேற்**
**சரியிலாப் பவளக் கிரியென வரவே**
**சங்கொடு தமருகம் முழங்க**
**மரவுரி யுடுத்த சதமுகன் குண்டோ**
**தரன் திரிவாமிமா வனுவோடு**
**அரிமுகன் பஞ்ச வாகு வெண்ணீற்றை**
**அணிந்தவர் அன்புடன் அடைந்தார்.**

கம்பராமாயணத் தொடரும் கருத்தும் இந்நூல் எங்கும் காணலாம். இது இயற்கை. பெருநூல் செய்த இவ்வாசிரியர், தம்மினும் பெருநூல் செய்தாரைப் பயின்று செய்தலே மரபு. 'நாடிய பொருள் கை கூடும்' என்ற பாடலைத் தழுவியது முன் காட்டினோம். 'வண்மையில்லையோர் வறுமையின்மையால்' என்ற கம்பர் பாடலைத் தழுவி எழுந்தது பின்வருவது:

**மறமில்லை மனந்தனின் ஞான முற**
**அறனில்லை அதன்ம மிலாதுயரும்,**

**உறவில்லை உறும்பகை யின்மையினால்**
**குறைவில் வள நாடியல் கூறரிதே.**

நாராயணன் எங்குமிருக்கிறான் என்று பிரகலாதன் இரணியன் முன் சொன்ன 'சாணினுமுளன்' என்ற கம்பர் பாடல் இங்கு,

**நொய்யதாகும் அணுவினை நூறெனக்**
**கொய்து கூறிட்ட கோணங்கள் தோறுளன்,**
**வையம் வானம் வடவரை மீதுளன்,**
**மெய்யுட் டோன்றி விளங்கிய மாமுதல்.**
**நிகரிலாத என்நெஞ்சி லுளன், இவன்**
**புகலுஞ் சொல்லினுளன், மணி பூணுளன்**
**இகழ்வில்உன்னி தயப்பங் கயமெனும்**
**முகையின் விஞ்சும் பொகுட்டுள மூர்த்தியோன்**

என வருகிறது. இதனோடு கம்பர் பாடலை ஒப்பு நோக்குக.

**சாணினும் உளன், ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட**
**கோணினும் உளன், மாமேருக் குன்றினும் உளன், இந்நின்ற**
**தூணினும் உளன், நீ சொன்ன சொல்லினும் உளன், இத்தன்மை**
**காணுதி விரைவில் என்றான், நன்றெனக் கனகன் நக்கான்.**

'நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்' என்ற கம்பர் பாட்டு இங்கு, 'மாயன் வடிவின்னலம் மகிழ்ந்தினிது நோக்க-ஆயிழை உனக்கு விழி ஆயிரமும் வேண்டும்' என்று வருகிறது.

இந்தப் பாகவதம் திருமாலின் பத்து அவதாரங்களையும் விவரிக்கிறது. முதல் ஏழு அவதாரங்களையும் தனித்தனிப் படலங்களில் குறித்துக் கூறிய பிறகு நாரதமுனிவன் கண்ணன் பிறப்பு முதல், அவனே உருக்குமிணிக்கேற்ற மணவாளன் என்று கூறுவது வரையில் பல படலங்களால் விரித்துரைக்கிறார். இதுவரை நூலின் பாதிப் பகுதி. கண்ணன் மனம் செய்தபின் கடந்த நிகழ்ச்சிகள் அடுத்து பகுதி. வைதிகப் படலத்தில், கண்ணன் உருப்பிணியுடன் ஓர் யாகம் செய்யத்



தொடங்குகிறான். அப்போது ஓரந்தணன் தோன்றி, ''என் பிள்ளைகள் மூவர் பிறந்தவுடன் உடலோடு மாயையால் மறைந்து விட்டார்கள். என் மனைவி நாலாம் பிள்ளை பெறப் போகிறாள். இப்பிள்ளை யேனும் மாயையால் மறையாமல் நீ காத்தருள்'' என்று வேண்டலும், பார்த்தன் அதற்கு உறுதியளிக்கிறான். அப்பிள்ளையும் பிறந்தவுடன் மறைந்தது கண்ட வேதியன் பார்த்தனுடைய வில்லாற்றலைப் பழிக்கிறான். கண்ணனிடம் முறையிட, அவன் அவ்வேதியனையும் பார்த்தனையும் தேரில் ஏற்றிக் கொண்டு விரசையாற்றங் கரையில் இருவரையும் நிறுத்தி விட்டு, அப்பால் வைகுந்தம் புகுகிறான். அங்கு கீழ்த்திசையில் சண்டப் பிரசண்டர், தென் திசையில் பத்திர சயத்திரர், மேல் திசையில் சய விசயர் வட திசையில் தாதா விதாதா காவல்; உட் சென்று அங்கு அச்சுதனைக் கண்டான். 'அந்தணன் சிறுவனைத் தருகிறேன், நீ அவனியில் தச அவதாரம், இந்துவின் வதனத் தெண்மர் தேவியர் மகிழ்ந்திடக் காட்டுதி' என்றான். இவனும் மச்சாவதாரம் முதலான எல்லா நிகழ்ச்சிகளையும் விரிவாய் நடித்துக் காட்டினான். தனது அவதார நிகழ்ச்சிகளையும் விரிவாய் நடித்து மறையவன் புதல்வனுக்காக இங்கு வந்து நிற்பதையும் நடித்துக் காட்டி, மேல் வரப் போகிற பரியுருவாகிய கல்கி யவதாரத்தையும் நடித்துக் காட்டினான். விமலன் மகிழ்ந்து அந்தணன் சிறுவனைத் தரவே, பெற்று வந்து அந்தணனிடம் கொடுத்தான்.

இவ்வாறு கண்ணன் அங்கு நடித்துக் காட்டிய கல்கியவதாரத்தையும் கற்கிப்படலம் என்ற தனிப் படலமாக இறுதியில் விரித்துரைக்கிறார். சனமேசயனுக்குப் பின் தொடர்பாகப் பல தலைமுறை ஆட்சி செய்வோர் வரலாறுகளைச் சொல்கிறார். இவ்வாறு பெயரும் ஆட்சிக் காலமும் சொல்லுகின்ற பாடல்கள் 24. பிறகு உலகில் ஆட்சியும் தருமம் எப்படிக் கீழாகும் என்பதை மூன்று பாடல்கள் கூறும்.

**தருமமில் மிலேச்சர் மரபினோர் அனேகர்**
**தரையினை யாளுவர், தம்மில்**
**துரிதம் வந்துற வேஅமரிடை அனேகர்**
**மடிந்திடச் சூத்திரர் முதலாய்,**

**வருண மற்றுயரும் சங்கர சாதி,**
**மறுவிலா அனா மிகராள்வர்,**
**அருமறை புராணசாத்திரம் எவையும்**
**அருமறை நெறி அகன்றிடவே.**

**வருணமும் இலாமல் மறை நெறிப்படியே**
**மணஞ் செய்யும் கருமம் அகல,**
**அரிவையர் பலரை யணைந்திடஅதுவும்**
**அறன் எனச் சம்மதமாகிப்**
**பருவமோ ரெட்டில் சிசுவை மங்கையர்கள்**
**பயந்திடப் படியிடை நரர்க்குப்**
**புருட வாயுசுசொல் வருட முப்பதுமாய்த்**
**தும்பைபோற் குறுகும் பூமரங்கள்.**

**தரும மெய் பொறை சற்குணம் அருளீகை**
**தவந் தெய்வம் பேணுதல் எல்லாம்**
**இருநிலத் தகலக் கதம் வதை முயற்சி**
**இகழ்ச்சி பொய் வஞ்சனை யதனம்**
**மருளிவை மலிய மலர் மகள் வாணி**
**அகன்றிட மதியிலாக் கயவர்**
**திரளு வரியினும் அதிகமாய்ப் புவிமான்**
**திடுக்கிட மிடைகுவா ரன்றே.**

இதன் பின் அவந்தி தேசத்தின் கம்பளக் கிராமத்தில் பிராமண குலத்தில் விண்டுசித்து என்பவன் மகனாய்க் கற்கி பிறப்பான். அவன் தங்கையானவள் கயவர்களை அழிப்பாள். கலியுகம் நீங்கும். திரேதாயுகம் பிறக்கும். தரும வழியில் நிற்கும் மனிதர்களே எஞ்சுவார்கள். இவ்வாறு கதையை முடித்துப் பின் பாகவதம் வந்த வழியையும் சொல்கிறார். அனந்தன் முதலாக விதுரன் வரை சொல்லப்பட்டது என்கிறார்.

மீன் முதலாக தெய்வத் தன்மை பொருந்திய கிருஷ்ணாவதாரம் வரையில் வளர்ந்து அபிவிருத்தியடைந்த அவதார முறை, அடுத்ததாகிய குதிரை வடிவமுடைய கல்கியவத் தாரத்தில் கீழிறிங்கி விடுகிறது. (தொடரும்)



# திருவேங்கடவன் உலா

**ஆசிரியர்: தி.பொ. பழனியப்ப பிள்ளை.(பதிப்பாசிரியர்-1950ஆம் ஆண்டு திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கழகம் பதிப்பித்த நூலில் அமைந்துள்ள குறிப்புகள்.) இதழ் 164இன் தொடர்ச்சி.**

**85. மத்தினா னந்தணரோ மத்தினா னான்மறைச்சே**
**மத்தினான் பாலாழி மத்தினான் - மெய்த்தமறை**

ஆயிர நாமத்தினான் - சகஸ்ர நாமன். ஓமத்தினான் - யாகபதி. நான்மறைச் சேமத்தினான் - வேத ரக்ஷகன். பாலாழி - பாற்கடல். மத்தினான் மந்தர மலையாகிய மத்தினையிட்டுக் கடைந்தோன்.

**86. யங்கத்தான் பொற்பாண்ட ரங்கத்தா னெல்லாந்தன்**
**னங்கத்தான் செங்கைச்சா ர்ங்கத்தான் - சங்கத்தான்**

மறையங்கத்தான் - வேதாங்கங்களையுடைய பிரமன். பாண்டரங்கத்தான் - பண்டரங்கக் கூத்தினையுடைய சிவன். எல்லாம் தன் அங்கத்தான் - பிரமன், சிவன் இவர்களை எல்லாம் தன் மேனியில் உடைய திருமால். கேசவன் என்னும் திருநாமப் பொருள் காண்க. சார்ங்கம் வில். செங்கைச் சார்ங்கத்தான் - வில்லைத் தன் சிவந்த திருக்கையிலுடையான். சங்கத்தான் - பாஞ்சசன்னியம் என்ற திருச்சங்கினை யுடையான். திகிரியான் சுதரிசனம் என்ற திருச்சக்கரத்தை யுடையான்.

**87. தன்கைத் திகிரியான் றண்ணக் திகிரியான்**
**தென்கச் சியிலத் திகிரியான் - தன்கைக்கு**

திகிரி - தேர். தென்கச்சி - தெற்கிலுள்ள திருக்கச்சி நகர். அங்குள்ள அத்திகிரியை யுடையான்.

**88. ளோட்டினா னுண்பலியை யோட்டினான் வைகுந்த**
**நாட்டினா னென்புலமை நாட்டினான் - கூட்டுமறை**

ஓட்டினான் உண் பலியை ஓட்டினான் - பிரமன் தலையோட்டினால் சிவன் பிச்சை உண்ணுதலை நீக்கியவன். என் புலமை நாட்டினான் - நூலாசிரியர் தமக்குத் திருமால் திருவருட்பாங்கால் பேரறிவு வாய்த்தமை கூறுகின்றார்.

**89. நாதநா தன்கிடைக்கு நச்சினா னச்சினான்**
**வேதவே தன்சபரி மெச்சினான் - கோதிலா**

மறையோசையை உடைய தலைவன். கிடை - மறை ஓதும் இடம்: அன்றி ஆடுகளின் கிடை, நச்சினான் விரும்பினோன். அச்சினான் - அச்சம் உடையான்: அன்றி அச்சிறியோன். வேதத்தால் அறியப்படுபவன். சபரி - என்ற வேட்டுவ மகள் மெச்சுதலை உடையவன் - இராமாயண ஆரணிய காண்ட வரலாறு.

**90. னாசவா ரச்சபையி லாடுவா னாடுவான்**
**பாரவா ரன்சுருதி பாடுவா - னீருடுத்த**

சபையிலாடுவான் - சிவன். அவனால் நாடப்படுமவன். பாரவாரன் - கடலிடத்திருப்பு உள்ளவன். சுருதி - வேதம். நீர் உடுத்த - கடல் சூழ்ந்த.

**91. வன்னமே யன்னமா மன்னத்தா னாமருப்புச்**
**சின்னமே சின்மாஞ் சின்னத்தான் - பின்னை**

அன்னம் - அன்னம் போன்ற பூமிப் பிராட்டி. மண்ணுலகு திருமாலுக்கு உணவாதலின் நயம்தோன்ற அன்னம் ஆம் என்றார். ஆ - மருப்பு பசுவின் கொம்பு. சின்னம் - சிறு துண்டு, ஊது கருவி, அடையாளம் என்ற மூன்று பொருளும் கொள்ளின், பசுக்கொம்பின் சிறு துண்டினை ஊது கருவி அடையாளமாகக் கொண்டவன் என்று கண்ணன் திறம் காண்க. பின்னை - பின்னைப் பிராட்டி. "பின்னை தோண் மணந்த பேராயன்" - ஆழ்வார்.

**92. மணவாளன் வாளன் மதுசூதன் சூதன்**
**குணவாளன் புட்கோபன் கோபன் - நிணமே**

மணவாளன் - மணம் கொண்ட தலைவன். வாளன் - நாந்தகம் என்ற வாட்படை யுடையான். மது சூதன் - மது என்ற



அசுரனைக் கொன்றவன். சூதன் - தேரினை ஓட்டுபவன். குணவாளன் - அநந்த கல்யாண குணங்களை உடையான். புட்கோவன் - பகாஸுரன் என்பான் கம்சன் ஏவலால் கொக்கு வடிவாய்க் கண்ணனைக் கொல்ல வந்த போது அதன் வாய் அலகினைக் கிழித்துக் கொன்றதனால் இப்பெயர் சாற்றினர். கோபன் - இடையன். நிணம் - கொழுப்பு.

**93. பாரவுங் கலப்பை பரசு சரசாப**
**விராம னிராம னிராம - னாவிற்**

கலப்பை, பரசு, சரசாபம் - இவை முறையே நிலம் உழுகின்ற ஏர், கோடரி, அம்பு பூட்டிய வில் என்ற படைக்கலங்களைக் குறிக்கும். பின் அடியுள் உள்ள 'இராமன்' என்ற மூன்று பெயர்களும் முறையே கலப்பை, பரசு, சரசாபம் என்பவற்றொடு நிரணிறையாய் இயைந்து பலராமன், பரசுராமன், தசரதராமன் இவர்களைக் குறித்தல் காண்க. நிணமே பராவும் - என்பது மேல் கண்ட முப்படைக் கலத்துக்கும் உரிய அடைமொழியாம். அரா - ஆதிசேஷன்.

**94. படியளப்பா னெற்கும் படியளப்பா னண்ட**
**முடியளப்பா னென்று முடியா - னெடிய**

அராவிற்படி - ஆதிசேஷன் தாங்கும் நிலவுலகம். அதனைத் திரிவிக்கிரமாவதாரத்தில் அளவிட்டான் ஆதலின் 'படியளப்பான்' என்றார். எற்கும் படியளப்பான் - எளியேனுக்கும் அன்றன்று வாழ்க்கைப் பொருள் உதவுவோன். அண்டம் - மேலுலகு. முடியான் - அளவில்லாதவன்.

**95. வடமா மலையான் வரத்தா னெதிர்கொள்**
**வடமா மலையான் வரத்தான் - படிபஞ்ச**

நெடிய வடமா மலையான் - நீண்ட கயிலை மலையான் ஆகிய சிவன். வரத்தான் வரத்தினாலே. எதிர் கொள்ளும் வேங்கடமா மலையுடையவன். வரத்தான் - வரந்தரும் கடவுள்.

**96. பூதங்க ளப்பன் புராணமறை நூற்கப்பன்**
**மூதண்ட ராசிக்கு முன்னப்பன் - வேத**

பஞ்சபூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, வானம். இவற்றைத் தோற்றுவிப்போன் ஆதலின் பூதங்கள் அப்பன் என்றார். புராணம் மறைநூற்கு அப்பன் - வேதபுராண வித்தைகளுக்குத் தந்தை என்க. மூதண்ட ராசி - பிரமாண்டக் கூட்டம்.

**97. முனைவருக்கு மப்பனொரு மூவருக்கு மப்ப**
**னனைவருக்கு மப்பனா மப்பன் - றனதாந்**

முனைவர் - முற்பட்ட இருடிகள். மூவர் - ஆக்கல், காக்கல்,போக்கல் செய்யும் மும் மூர்த்திகள். அப்பன் ஆம் அப்பன் என்ற பாராட்டு காத்தற் கடன் பூண்ட கடவுட் குரியதாகக் காட்டியது போற்றற்பாலது.

**98. திருப்பதியு மாழ்வார்த் திர்த்தமும் பூங்கா**
**விருப்பு மடிப்புளியின் வீறும் - பொருப்படியிற்**

தனதாம் திருப்பதி - திருமலை அன்றி அடிச்சாரலில் அமைந்த திருப்பதியும் என்றபடி. ஆழ்வார் தீர்த்தம் என்பது கபில தீர்த்தம் எனப் பண்டு தொட்டு வழங்குவது. பூங்கா - பூஞ்சோலை. அடிப்புளியின் மீது - தாழ்வரையில் தழைத்து நின்ற திருப்புளிய மரமும் அதன் சிறப்பும். பொருப்பு - திருமலை.

**99. கோபுரமுந் தெண்ணீர்க் குளிர்மண் டபத்திரளு**
**மாபெரிய வேற்ற வனப்பாடுஞ் - சோபனஞ்சேர்**

அடியிற் கோபுரம் - தாழ்வரை அடிப்படிக் கோபுரம். தெண்ணீர்க்குளிர் மண்டபத்திரள். தெளிந்த குளிர்ந்த குடிநீர் தட்டின்றி யுள்ள வழியிடை மண்டபத்திரள். வனப்பாடு - தோன்றும் அழகு. சோபனம் = சோபனம் - படியடுக்குகள்.

**100. சிற்றேற் றமுநார சிங்கக்கோ விற்கிரியும்**
**பற்றேற்ற வேணிப் பழுக்குன்றுஞ் - சுற்றேற்று**

நாரசிங்கர் கோவிற்கிரி - திருமலை வழியிடை அமைந்துள்ள நரஸிம்ம ஸ்வாமியின் சந்நிதி. பிடித்து ஏறுதற்குரிய ஏணி போன்ற பழுக்குன்றும்: சுற்றேற்றும் சுற்றி ஏறும் இடமும்.

**(தொடரும்)**



# பன்னிரு பாட்டியலும் ஆழ்வார்கள் அருளிச் செய்த அந்தாதி மற்றும் மடல் இலக்கியங்களுக்கான இலக்கணங்களும்

இதழ் 164இன் தொடர்ச்சி. ஆசிரியர்: திரு. ம.பெ.சீனிவாசன்.

**யாப்பு வகை தொடர்ச்சி.**

பெரியாழ்வாரின் ‘போய்ப்பாடு’ என்னும் திருமொழி அறுசீர் ஆசிரிய விருத்தத்தாலும், திருமங்கையாழ்வாரின் ‘மன்னிலங்கு’ என்னும் பெரியதிருமொழிப் பதிகம் கொச்சகக் கலிப்பாவாலும் ஆனவை. திருவாய்மொழியோ ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் (6,7,8 சீர்கள்), தரவு கொச்சகக் கலிப்பா, கலிநிலைத்துறை, கலிவிருத்தம், வஞ்சி விருத்தம், வஞ்சித் துறை ஆகிய பல யாப்புகளால் ஆனது. இவற்றை நோக்க அந்தாதிக்குப் பலவகை யாப்புக்களும் பரவலாகப் பயன்படுத் தப்பட்டமை அறியலாம். எனினும் பின்னாளில் வெண்பா, கலித்துறையாலான அந்தாதிகளே மிகுதியும் எழுந்தன. இவ்விருவகைப் பாக்களும் ஒருவகையில் ஒப்புமை யுடையன. கலித்துறையின் ஒவ்வோரடியின் முதல் நான்கு சீர்களும் வெண்டளையமையுமாறு பாடுவதே அவ்வொப்புமை ஆகும். இதுகாரணமாகவே அந்தாதி பாடியோர் வெண்பாவையும் கலித்துறையையும் கையாண்டதாகக் கருதலாம். இவ்வகையில் பின்னோர்க்கு வழிகாட்டியாக ஆழ்வார்களின் வெண்பா அந்தாதிகளும் கலித்துறை அந்தாதியான திருவிருத்தமும் அமைந்தன எனலாம். சைவத்தில் பதினோராந் திருமுறையில் உள்ள அற்புதத் திருவந்தாதியும் (வெண்பா) பொன்வண்ணத் தந்தாதியும் (கலித்துறை) இவ்வகை முன்னோடிகளாகக் கொள்ளத்தக்கவை. நம்மாழ்வாரின் திருவாய்மொழியோ, அந்தாதி இலக்கியம் பலவகை யாப்பிற் பாடப்பெறலாம் என்பதற்கு முன்னோடி ஆகின்றது.

## பிற்கால வளர்ச்சி

காரைக்காலம்மையார், திருமூலர் தொடக்கமாக எழுந்த இவ்வந்தாதி என்னும் இலக்கிய வகையைப் பல சமயத்தவரும் பல நூற்றாண்டுகளாகக் கையாண்டுள்ளார். ((அ) சிவபெருமான் திருவந்தாதி - கபிலர் - சைவம். (ஆ) திருநூற்றந்தாதி - அவிரோதிநாயனார் - சமணம். (இ) திருவெவ்வுளூரந்தாதி - நாராயணதாசர் - வைணவம். (ஈ) முகையிதீன் அப்துல்காதிர் ஆண்டவர் பதிற்றுப்பத்தந்தாதி - அல்லி மரைக்காயர் - இஸ்லாம். (உ) அபிடேகதாதர் அந்தாதி - கிறித்துவம்.) திவ்வியப்பிரபந்தத்தில் இது பெரும் பங்கு வகிப்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. ஆழ்வார்கள் அந்தாதியில் காட்டிய ஈடுபாட்டின் விளைவாகப் பின்னரும் வைணவ அந்தாதிகள் மிகுதியாக எழுந்தன. ஆழ்வார்கள் பாடிய அந்தாதிகளையும் சேர்த்து வைணவத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட அந்தாதிகள் காணப்படுகின்றன.

வைணவ சமயத்தின் தத்துவத்தை விளக்குவதே நோக்கமாக வடமொழியில் பல நூல்கள் செய்த ஆசாரியர்களும், தமிழிற் செய்த நூல்களுட் சிலவற்றை அந்தாதியாகப் படைத்தனர். அவ்வகையில் வேதாந்ததேசிகர் தாம் பாடிய 'அதிகார சங்கிரகம்' என்னும் நூலில் முப்பத்துமூன்று பாடல்களை அந்தாதித் தொடையமையப் பாடியிருப்பதும், மணவாளமாமுனிகள் ஒவ்வொரு திருவாய்மொழிப் பொருளையும் சுருக்கி உரைக்கும் முகமாக நூறு வெண்பாக்களில் 'திருவாய்மொழி நூற்றந்தாதி' என்னும் நூல் பாடியிருப்பதும் குறிக்கத்தக்கவை. வேதாந்த தேசிகரைப் போற்றிச் செய்த 'பிள்ளை அந்தாதி'யும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

17-ஆம் நூற்றாண்டில் வைணவப் பெரும்புலவராக விளங்கிய பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் அஷ்டப்பிரபந்தத்தில் அந்தாதிகளே அதிகம் உள்ளன. அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடத் தந்தாதி என்பன அவை. அந்தாதித் தொடை அமையுமாறு அவர் பாடிய திருவரங்கக் கலம்பகத்தையும் சேர்த்துக் கொண்டால் அஷ்டப்பிரபந்தத்துள் செம்பாதிக்கு மேல் அந்தாதிகள் என அறியலாம். 19-ஆம் நூற்றாண்டில் வேலுப்பிள்ளை என்பார் பாடிய அந்தாதி ஒன்று, 'திருவாய்மொழி நூற்றந்தாதி' என்றே பெயர்



பெற்றுள்ளது. வேலாமூர் கிருஷ்ணமாசாரியார் என்பார் எழுதி 1902-இல் வெளியான 'திருப்புல்லைத் திரிபந்தாதி' என்னும் நூலில் மட்டும் ஐந்து அந்தாதிகள் காணப்படுகின்றன. அவை யமக அந்தாதிகளாகவும் திரிபு அந்தாதிகளாகவும்அமைந்தவை. இதனால் இந்நூற்றாண்டுத் தொடக்கம் வரை அந்தாதி ஆக்கத்தில் வைணவர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டினை உணரமுடிகிறது.

கி.பக்ஷிராஜய்யங்காரின் 'திருமொழி நூற்றந்தாதி' திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருமொழியின் சாரமாக அமைந்தது. நோக்கு, போக்கு, அமைப்பு ஆகிய மூன்றிலும் முன்னர் நாம் குறித்த மணவாளமாமுனிகளின் திருவாய்மொழி நூற்றந்தாதியை ஒத்திருப்பது. எனவே இவையிரண்டையும், 'இணை இலக்கியங்கள்' எனலாம். 1981-இல் வெளியான அரங்க சீனிவாசனின் 'திருவரங்கத்தந்தாதி' அண்மைக்காலத்திய வைணவ அந்தாதியாகும்.

## சைவத்தில் அந்தாதி

சைவத்தைப் பொறுத்தவரை சம்பந்தர் பதிகம் ஒன்றைத்தவிர அந்தாதி அமைப்பு தேவாரங்களில் இல்லை. ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் ஏழு பதிகங்கள் அந்தாதியாக அமைந்தவை. பதினொராந் திருமுறையில் மட்டும் எட்டு அந்தாதிகள் உள. இவை தவிர அந்தாதி அமைப்புடன் கூடிய வேறு பெயரில் அமைந்த நூல்களும் உள்ளன. எனவே அத்தொகுப்புக்கு, 'அந்தாதி மாலை' என்னும் பெயரும் உண்டு. இவற்றுள் காரைக்காலம்மையாரின் 'அற்புதத் திருவந்தாதி'யும் சேரமான் பெருமாள் நாயனாரின் 'பொன் வண்ணத்தந்தாதி'யும் காலத்தால் முந்தியன. திருவாசகத்துள் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் என்னும் பகுதிகளும் வேறு சில பதிகங்களும் அந்தாதியாக உள்ளன. இவற்றுள் முன்னைய இரண்டும் முறையே நூறு பாடல்களும், ஐம்பது பாடல்களும் கொண்ட பெரும் பகுதிகள்; திருச்சதகம் பத்தும் பத்துச் செய்யுட்களைக் கொண்ட பத்துப் பிரிவுகள் உடையது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித் தலைப்புடன் வகுக்கப் பெற்றிருக்கிறது. இதில் உள்ள செய்யுட்கள் நூறும் அந்தாதித் தொடையில் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்பினும் யாப்பு வகையால் பலதிறப்படும். நீத்தல் விண்ணப்பமோ பத்துப் பத்துச் செய்யுட்கள் என்ற பகுப்பின்றி,

கட்டளைக் கலித்துறை என்னும் ஒரே யாப்பில் அமைந்துள்ளது. ஆக, இவ்வந்தாதிகளில் மாணிக்கவாசகர் கையாண்ட உத்தி, திருவாய்மொழியைப் பலவகை யாப்பினால் அந்தாதித் தொடையில், பல பத்துக்களாகப் பாடிய நம்மாழ்வார், ஒரேவகை யாப்பினால் பெரிய திருவந்தாதி (வெண்பா), திருவிருத்தம் (கலித்துறை), திருவாசிரியம் (ஆசிரியம்) முதலிய அந்தாதிகளைப் பாடியதை ஒத்திருக்கின்றது.

## காப்பியத்தில் அந்தாதி

கொங்குவேளிர் தம் காப்பியமாகிய பெருங்கதை முழுவதையும் அந்தாதியாக அமைத்திருப்பது அந்தாதியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றமாக உள்ளது. இவையாவும் அந்தாதிகளாக உள்ளன. சேக்கிழார் தம் பெரியபுராணத்தில், 'உலகெலாம்' எனத் தொடங்கி, 'உலகெலாம்' என்றே முடித்திருக்கிறார். இங்ஙனம் ஒரு பெரிய நூலையே அந்தாதிப் பண்புடன் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்தாதி அமைப்பில் காப்பியப் பெரும் புலவரும் பெருவிருப்பம் கொண்டிருந்தனா் என்பதற்கு இவை சான்றாகின்றன. ஆயிரம் பாடல்களுக்கு மேல் அந்தாதித் தொடை அமையுமாறு பாடப்பெற்ற திருவாய்மொழியின் தாக்கத்தால் இக்காப்பியப் புலவர் இருவரும் தம் நூல்களை இங்ஙனம் அமைத்தி ருக்கக்கூடும்.

## சிற்றிலக்கியங்களில் அந்தாதி

சிற்றிலக்கியங்களில் குறிப்பாக, கலம்பக உறுப்புக்களுள் ஒன்றான அம்மானை என்பதில், இவ்வந்தாதி இடம்பெறுகின்றது. அங்குப் பெண்டிர் மூவர் ஆடும் அம்மானையில் முதற் பெண்ணின் கூற்றுக்கு இரண்டாமவள் தொடுக்கும் வினாவும் மூன்றாமவள் கூறும் விடையும் அந்தாதியாக அமைகின்றன.

## இலக்கண அந்தாதிகள்

அந்தாதித்தொடை இலக்கியங்களே அன்றி, இலக்கணங் களும் எழுந்தன. அந்தாதித் தொடையில் எழுந்த முதல் இலக் கணநூல் வெண்பாப்பாட்டியல் ஆகும். சுவாமிநாதம், வரையறுத்த பாட்டியல் என்பனவும் அந்தாதித் தொடையில் அமைந்தனவே.

(தொடரும்)



# எறும்பியப்பாவின் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

*இதழ் 164இன் தொடர்ச்சி.* *விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**இதழ் 164இல் கொடுக்கப்பட்டுள்ள மூலத்திற்கான விளக்கம்:**

**இந்திரனானவன் திருமால் வேடங்கொண்டு அம்பரீட மன்னனை மயக்க வந்தாற்போலே, இறைவன் செய்கிற மாயச் செயல் என நினைத்து பிரமாணங்களுக்கு எதிரான செயல்களை சிஷ்டாசாரமென்று மேற்கொள்ளக் கூடாது; அப்படிப் பட்டவர் களைத் (தீயஒழுக்கமுள்ளவரைத்) தூற்றுதலுங்கூடாது. தான் எட்ட நின்று, ''அவன் மாயங்கண்டீர்! அது அறிந்து அறிந்து ஓடுமின்'' (திருவாய்மொழி 4-10-6) என்று ஆழ்வார் அருளிச் செய்தாற்போலே ஓடிப்போக வேண்டும். இறைவன் விளை யாட்டின் நிமித்தம் செய்யும் தொழிலை ஒருவன் தூற்றினா னாகில், அதுவும் விளையாட்டில் ஈடுபட்ட இறைவனுக்கு விருப்பமல்லாமையாலே இது கூடாதே என்று கூறினால், கூறினவனுக்கு இம்மையில் தீமைவிளையும். மாமியார் கச்சையென்று அவ்விடத்தில் நின்றால் பொல்லாங்கு எவ்வாறு விளையுமோ அவ்வாறே. எனவே, பிரமாணத்தின்படி ஒழுகவல்லார், அதிலே நம்பிக்கையுடையார் யாவரோ அப்படிப்பட்ட அதிகாரிகளோடு இப்பொருளைக் கூறிக்கொண்டு முன் சொன்ன அதிகாரியல்லாதாரைவிட்டு விலகியிருக்க வேண்டும். ''ஸர்வதர்மாந்'' என்ற சரமச்லோகத்துக்கு எதிர்த் தட்டான பொருளைக் கற்பிப்பவர் வரம்புகடந்த நிலைக்குச் சரித்திரம்; எம்பெருமானார் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தை வளர்த்துக் கொண்டு வரும்போது, யாதவப்ரகாசன் இவருடைய பெருமை யெல்லாம் தெரிந்திருந்தும் அவன் தாய் வார்த்தையாலும் தேவப்பெருமான் கட்டளையாலும் எம்பெருமானாரைச் சரணடைந்து ஸ்ரீவைஷ்ணவ சிந்தாந்தத்தில் புகுந்தது கண்டு, அவனுடைய சீடர்களும் மக்களும் பொறுக்கமாட்டாமல் இந்தச்**

சமயத்துக்குத் தீய ஒழுக்கங்களைக் கற்பித்துத் தூற்றவேண்டும் என்று நினைத்து நம்முடைய பூருவாசாரியர்கள்;

---

**மூலம்:**

(293) ''பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந்ம்லேச்சேபி வர்த்ததே ஸவிப்ரேந்த்ரோ முநிஸ்ரீமாந்'' என்றருளிச் செய்த பகவதாஜ்ஞையாலே விலக்ஷண ஸம்பந்த ஸ்வீகாரத்தை அங்கீகரிக்க, அதுவே ஹேதுவாக்கி ஸர்வவர்ண ஸாங்கர்யம் உண்டாக்கி, சரம ஶ்லோகத்திலே ஸர்வதர்மத்யாகத்தை விதித்ததே ஹேதுவாக்கி, (294) ''இதம் குரு - இதம் மாகார்ஷீ'' என்கிறவிரண்டும் த்யஜிக்க வேணுமென்று நிஷித்தாநுஷ்டாநத்தையும் ப்ரவேஶிப்பித்து, இது சரமதர்மமென்று சில க்ரந்தங்கள் கல்பித்து, தத்காலவர்த்திகளான சில ஆஸுரப்ரக்ருதிகளை மோஹிப்பிக்க அர்த்தகாம பரவஶருக்கு ஸஹகாரமாகையாலே, தாவாநலம் போலே வ்யாபித்து வாரா நிற்க, அக்காலத்திலே எம்பெருமானார் சிலரைப் பிடித்து ஶிக்ஷித்து க்ரந்தங்களை வாங்கி முறித்து தத்க்தமாக்கிப் பொகட்டாலும், கலிதோஷத்தாலே மீளவும் அன்றைக்கன்று அபிவ்ருத்தமாய் ஶிஷ்டர் கர்ஹிப்பர் என்று வெளியிடாதே, ஸ்வகோஷ்டிக்கநுகுணமானார்க்கே இது, ஶிஷ்டாசாரமென்று சொல்லிக்கொண்டு, இத்தர்ஶநத்துக்கு அநர்த்தகரராய்த்திரியா நின்று கொண்டு, பிள்ளைலோகாசார்யர் காலத்திலும், நீர் பண்ணினவிபரீத ப்ரஶ்நங்களைச் சிலர் சங்கிக்க, அதின்மேலே ஸ்ரீவசநபூஷண திவ்ய ஶாஸ்த்ரம் பகவதாஜ்ஞையாலே பிறந்ததென்று சில ஜ்ஞாநாதிகர் அருளிச்செய்வர்.

---

**விளக்கம்:**

(293) ''மிலேச்சனாயிருந்தாலும் - தாழ்ந்த சாதியில் பிறந்தவனானாயிலும் பகவானிடத்தில் முன்னர்க் கூறப்பெற்ற எட்டுவித பக்தியையுடையவனாயிருந்தால் அவனை, அந்தணன், முனிவன், திருவாளன், கவிஞன்'' என்று அருளிச் செய்த பகவானது ஆணையாலே உயர்வான ஸம்பந்தத்தை ஏற்றுக் கொண்டு அங்கீகரிக்க, அதையே காரணமாக்கி சாதிக் கலப்பை



யுண்டாக்கி, சரமச்லோகத்தில் ஸர்வ தர்மத்தையும் விடுவதை விதித்திருப்பதை ஏதுவாக்கி, (294) ''இதைச் செய்- இதைச் செய்யாதே'' என்று ''நல்லதைச் செய்தலும் தீயன தவிர்த்தலும் வேண்டும்'' என வேதம் விதித்த இவ்விரண்டையும் விட்டுவிட வேண்டும் என்று சொல்லி தீயவொழுக்கத்தை உட்புகுத்தி, இதுவே மேலான இறுதியான தருமமென்று சில நூல்கள் எழுதி அக்காலத்திலுள்ள சில அசுரமனங்கொண்டவர்களை மயங்கச் செய்யவே, பணம் முதலிய பொருளிலும் இன்பத்திலும் வேட்கையுள்ளவர்களுக்கு இக்கெட்டவொழுக்கம் துணை செய்ய சௌகரியம் ஆகையாலே, எரிக்கும் தீயைப்போல் எங்கும் பரவாநிற்க, அக்காலத்திலே எம்பெருமானார் அவர்களில் சிலரைப் பிடித்து தண்டித்து அந்த நூல்களை வாங்கி முறித்து நெருப்பிலிட்டார்; அவ்வாறு செய்தும் கலியின் கொடுமையாலே அந்நூல் மீண்டும் அன்றைக்கன்று வளர்ந்து சான்றோர் பழிப்பர் என்று வெளியிடாதே, தங்கள் கூட்டத்தார்க்கே இது சிட்டாச்சாரம் என்று கூறிக் கொண்டு இந்த ஸ்ரீவைணவ சமயத்துக்குக்கேடு செய்து திரியாநிற்க, ஸ்ரீபிள்ளையுலகாசிரியர் காலத்திலும் இந்தத் தொற்றுநோய் பரவி, 'நீர் கேட்ட விபரீதமான வினாக்களைக் கேட்டு ஐயமுற, அதன் பின்னர் ஸ்ரீவசநபூடணம் என்னும் திவ்விய சாத்திரம் இறைவன் அரங்கன் ஆணையிலே அவதரித்து எனச் சில நிறைஞானத்தர் அருளிச் செய்வர்.

---

**மூலம்:**

பூர்வர்கள் ஸ்வப்ரபந்தங்களிலே ப்ராயஶ: அதிகார ஸ்வரூபம் ஶிக்ஷித்தால், ஆள்பற்றாதென்று ஶரண்ய ப்ரபாவமே த்ருட தமமாகச் சொல்லி கொண்டு, தத்குணவிஶ்வாஸ பாஹுள்யமுண்டாக்கி அதிகாரி ஸ்வரூபம் காதாசிதகமாக ஸூசிப்பித்துக்கொண்டு போருகையாலே யதாவஸ்திதவேஷம் நன்றாக தெளிய மாட்டாதே, ஶரண்ய ப்ரபாவத்தையே பார்த்துத் தம் ஸ்வரூபம் கெட்டுப்போம்படி, ஸம்ஸார பத்தராய் புத்ர தாராஸக்த சித்தராய் துர்விக்ஷய அத்யந்த ப்ரவணராய் நாமரூபங்களொழிய ஸம்ஸாரிகளுக்கும் தங்களுக்கும் வாசியின்றிக்கே, இவ்விட ரீதாநுஷ்டாநங்களெல்லாம் சொல்லிக் கொண்டு திரிகையாலே, அத்தை நிராகரிக்கைக்கு ஹேதுவாகக்

கொண்டு வசநபூஷண திவ்ய ஶாஸ்த்ரமருளிச் செய்கையாலே ''உய்யநினைவுடையீர் உங்களுக்குச் சொல்லுகின்றேன்'' (உப.மாலை) என்று, உஜ்ஜீவநத்திலே இச்சையுடையவர்களுக்கு ஸ்ரீவசநபூஷணாதி நிஷ்டை யுண்டாக வேணுமென்று அஸ்மதாசார்யோக்தம், பகவதாஶ்ரிதரானாலும் ஸஹவாஸாதிகளுக்கு அயோக்யரென்று சொல்லா நின்றீர், (295) ''மத்பக்தஜநவாத்ஸல்யம்'' என்று, என்னையாஶ்ரித்தவர் பக்கல் தோஷபோக்யராயிருக்க வேணுமென்று, ஸர்வேஶ்வரன் தானே சொன்னானிறே யென்னில், அதுக்கர்த்தம்; அக்ருத்யகரணம் க்ருத்யாகரண பகவதாபசார பாகவதபசாராதி நிஷித்தாநுஷ்டாநம் போக்யமாகக் கொள்ளவேணுமென்று சொல்லுகிறதன்று.

---

**விளக்கம்:**

பூருவாசாரியர்கள் மேற்சொன்ன ஸதாசாரங்களைத் தங்கள் பிரபந்தங்களிலே முறையை வலியுறுத்தி பிரபந்நரான அதிகாரி சுவரூபத்தைக் கண்டித்துச் சொன்னால், வைஷ்ணவத்துக்கு ஆள்பற்றாது என்று, இறைவனது பெருமையை மாத்திரம் உறுதிபட உயர்வாகச் சொல்லிக்கொண்டு, இறைவனுடைய கல்யாண குணங்களில் அதிகமாக நம்பிக்கையை யுண்டாக்கி அதன் மூலமாக நல்ல ஆசாரத்தையுடைய அதிகாரியின் சுவரூபத்தைச் சிற்சில இடங்களில் உணர்த்தியிருப்பதன் உண்மையான வடிவத்தை நன்றாக அறியாத சில மந்தமதிகள், சரண்யனான எம்பெருமானது பெருமையை மாத்திரம் பார்த்துத் தம் இயல்பு கெட்டுப்போம்படி, ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டவராய் பிள்ளை மனைவி ஆகியோரிடத்துப் பற்று உள்ளங்கொண்டவராய்த் தாழ்ந்தவற்றில் மிகவும் ஈடுபாடுடையவராய், வைஷ்ணவன் என்ற பேரும் உருவத்தையும் தவிர ஸம்ஸாரிகளுக்கும் தங்களுக்கும் வேறுபாடில்லாமல், இப்படிப்பட்ட விபரீத அநுட்டாநங்களைக் கூறிக்கொண்டு திரிவதாலே, அவ்வாறு கூறுபவரைக் கட்டிப்பான் நிமித்தம் ஸ்ரீபிள்ளை லோகாசாரியர் ஸ்ரீவசநபூஷணம் அருளிச்செய்திருப்பதாலே, ''உய்ய நினைவுடையீர்! உங்களுக்குச் சொல்லுகின்றேன்'' உய்யிவில் ஆசையுடையோர்க்கு ஸ்ரீவசநபூஷணம் திருமந்திரம் போன்றவற்றில் நிஷ்டையுண்டாக வேண்டுமென்று அடியேனுடைய ஆசாரியரான மாமுநிகள் கூறுவார். (தொடரும்)